1932

JL
m211, N32Nv.
N32.1.12.
177176.

stered No. M. 1500.
உ௨௦ 1
"NAVASAKTI"

நவசக்தி

6 JAN 1933

திங்கள் வெளியீடு

'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு'   'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

சிலம்பு கரு   1932ஞு டிசம்பர்மீ   பரல் உ

உள்ளுறை

	பக்கம்
செல்விடு தூது	கருட
சமரச சன்மார்க்க போதம் ...	ககக
சுந்தர சுலோசனை	ககரு
சிவனடியார் சிறப்பு	ககக
புதிய கல்வியும் புராதின ஆசிரமங்களும் ...	களரு
ஆநிரை பின் சென்ற அச்சுதன் ...	களச
தாவீது மன்னரின் தனிக் கோள் ...	களக
நமது நாட்டில் வழங்கும் பழங் கதைகள் ...	கஅஉ
இடிபோறு	கஅரு

வருடசந்தா

உள்நாடு ரூபா 3-8-0.   வெளிநாடு ரூபா 4.

அரிய தமிழ் நூல்கள்

	ரூ.	அ.
கந்தபுராணக் கருக்கம் (மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்)....	3	0
முருகவேள் பனுவல் திரட்டு	1	0
திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் முதல் திருமுறை (அரும்பத வுரையும் சரித்திரக் குறிப்பும்)	0	12
முருகன் திருவருட்பா	0	8
தேவி தோத்திர மஞ்சரி	0	4
குசேலோபாக்கியாநம் (மூலமும் அரும்பத உரையும்)	1	4
விநாயகர் பனுவல் திரட்டு	0	6
திருப்போரூர்ச் சந்நிதிமுறைத் திரட்டும், அரும்பத உரையும்		
கிளேஸ்	0	5
டிைப்	0	3
சிவபுண்ணியத் தெளிவு	0	3
காரைக்காலம்மையார் பதிகங்கள் (திரு. வி. க.) அரும்பதக் குறிப்புரையுடன்	0	6

அடக்கவிலைப் பதிப்பு நூல்கள்

	ரூ.	அ.
சம்பந்தர் தேவாரம்	1	0
அப்பர் தேவாரம்	0	12
சுந்தரர் தேவாரம்	0	4
திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு	0	10
திருவாசகம்	0	2½
தாயுமானவர் பாடல்	0	4
திரு அருட்பா—(பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு) 5-வது திருமுகப் பகுதி	0	6

கந்தர் அநுபூதி

சென்னை, இராயப்பேட்டை வேத ப்ரவசன மந்திரத்து

சிவத்தியானனந்த மஹரிஷி யவர்கள் எழுதிய

கூடார்த்த தீபிகை

என்னும் புத்துரையோடு கூடியது. இதுவரை இவ்வகைத் தெளிவான அநுபூதி உரை வெளிவர வில்லையென்று படித்தோர் பலரும் கொண்டாடிக் கூறியுள்ளார். விலை ரூபா 1.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

ஆர் அப்துல் ரஹீமத்
[ஒ]ப்பனிடுபவர் பெயர்
பிப்ரவரி 1993
ஒப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நாள்
பிப்ரவரி 1993
ஒப்பனிட்டு முடித்த நாள்
2/93
பார்க்கும்
.பா. எ.
[ஒப்]பம்
உதவியாளர்
கையொப்பம்
24/3/93

சக்தி

'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

சிலம்பு கூ ஆங்கீரஸ வூ மார்கழிமீ பரல் உ

நெல்விடு தூது

(தொடர்ச்சி)

தென்னாங்கன் சம்பா திருக்குறுங்கை நம்பிசம்பா
புன்னைவனச் சம்பாப் புழுகுசம்பா—வன்னவனை
சம்பாக்க ளென்னுந் தனியானைக் கொம்பனென்னுஞ்
செம்பாளை யென்னும் [1]சிறுகியென்னும்—செம்பாய்ப்
பறக்குஞ் சிறுகுருளி பார்க்கடுக்க னென்னும்
சிறக்கும் [2]பனைமுக்க னென்னும்—தறுத்தசிற
வாலன்சிறை மீட்டான் வளர்பூனைப் பாழிவெள்ளை
மீருஞ்சிறை மீட்டான் மல்முண்டன்—வானன்
கருஞ்சூரை சூரை கறுத்தநிக்க ராதி
விரும்புகன வெள்ளையதிக் ராதி—பெருங்கடல்போற்
கத்தும் பொலிவீர கஞ்சுகன் போலவெள்ளை
முத்துச் சொரிகுரும்பை முத்துவெள்ளை—யித்தனையோ
போரிநல்ல மீட்டான் புழுதி புரட்டியென்னும்
கோபெருகு சொக்கன்சம்பா நெல்லென்னும்—மாராச
வாணனென்னும் வான்கருங்கை வாலனென்னுஞ் சீரம்
பாணனென்னுங் கீர்த்தி படைத்தநல்லார்—சேனுலகில்
ஆதியில்லை நாயகனென் றுறகுரு வைப்பேரும்
வீதி விடங்கனென்ற மெய்ப்பேரும்—நீதிதிருக்
குற்றால மென்றுலகங் கொண்டாடி யபேரும்
பெற்றுமுன் பேரொருவர் பெற்றுரோ—வுற்றவொரு
தன்போ படைக்கத் [3]தவம்படைத்தார் யாரிதுபோ
உன்போல் பண்டைத்தவத்தே யோகக்காண்—தின்போலுஞ்
செஞ்சாலி [4]மீன்பார்க்குஞ் செவ்வியவாள் பெண்களுக்கோர்
அஞ்சாலி போயருமைக் கல்லிவோ—மஞ்சாலே
நீலியிட்ட மூக்கில்லைப் நெல்லேலி மாக்கு துலே
வேலியிட்டுக் காத்த விசேடமோ—ஞாலமெல்லாஞ்
சொல்லுகின்ற வுன்பேர்த் தூவெள்ளேர் சாக்கியனுர்
கல்லுண்டை சாத்திக் கதிபெற்றுர்—மெல்லமுதத்

(பி-ம்)—1 சிறுகியென்றும். 2 பனைமுக்க னரிக்கிராதியென்றும். 3 தவம்படைத்தார்.

தாதாவே யுன்பேரில் தாகமோ தாசர[தி]
சிதாபோ தக்தனையே சிந்தித்தான்—போதாமல்
சேனிலங்கை கட்டழித்துச் சீதைசிறை மீட்டுவந்த
பாணுமுன் பேருடைய பாணமே—பாணம்போய்
நீர்குடித்த வாரிதிதா னின்றமணல் வாரியென் றுன்
பேர்படைத்த தாலே பிழைத்ததே—கார்வண்ணன்
சித்திர காலியின்பின் சென்றதெல்லாம் உன்னுடைய
முத்திரைப்பேர் தன்னில்வைத்த மோகமே—கொத்திருந்து
வையகத்திற் பூம்பாளை மாதர்குழல் போற்றுவதும்
துய்யமல்லி கைகட்டிச் சூட்டியதும்—மெ[ா]ய்குழல்போல்
வள்ளைக் கொடிக்கழகு வாய்த்ததுமுன் பேருடைய
பிள்ளை தனக் கான பெருமானே—தெள்ளியநீ
யுண்டாக்கி லிவ்வுலக முண்டுநீ யில்லையென்றால்
கண்டதார் கேட்டதார் காவலா—தண்டாய்
[1]அயனூர்போ ஞலு மறுசுவை கூட்டித்
[2]தயவா யமுதூட்டுந் தாயே—இயலறியாப்
பேதலித்த பேர்க்கும் பெரியபுத்தி சொல்லிகின்றாய்
ஆதரித்துத் தக்கிவிடும் அப்பனே—மீதுலகும்
அம்புவியுந் தோன்றியோ ரன்னமெனத் தோன்றுமொரு
தம்பிமுன்னே தோன்றும் தமையனே—கம்பட்ட
மேனியுமாய் ராசிபுது மின்னனுமாய் முன்னுதித்தால்
தானியமாய்ப் பின்னுதிக்குந் தம்பியே—ஈனமாய்
ஆர்தடுத்துச் சொன்னாலு மஞ்சாமல் நானெனப்போய்
மார்புதட்டிப் பெண்கொடுக்கு மாமனே—தார்குழலார்
கொந்துமண மாப்பிள்ளை கூடந்தி லேறுமுன்னே
வந்துமணை வீடேறு மச்சானே—சிந்தினையாய்
வாட்டும்விலைக் காலத்தில் வந்துவிலை மாதரெல்லாங்
கூட்டமிடு மோகக் கொழுந்தனே—நாட்டவர்க்குக்
கன்னியழி யாதவர்போற் காசலையாய்த் தேடிபுண்ணும்
பொன்னனையார் கள்ளப் புருஷனே—முன்னேரம்
வந்தமுறை தானிருக்க மாற்கமுறை பேசமின்னார்[க்]
கந்த வடுகமுறைக் கம்மானே—தந்தபொருட்
காமியா ராகிக் கனசபைக்குள் நாணுத
மாமியார் நாணு மருமகனே—பூமுடித்த
மஞ்சனைய கூந்தலார் மாரிசமும் சூதுமிட்ட
[3]நெஞ்சடியே தோன்றும் நிலவறையே—நஞ்சுகளிறு
மூங்கில்வைக்குந் தோளார் மூலைகரியா முக்காடு
வாங்குவிக்குஞ் சூறு வளிக்காற்றே—பூங்குவளைக்
காட்டார் கருங்குழலார் காமராசப் பொக்கிஷத்தைக்
கோட்டானைத் தாழ்திறக்குங் குச்சிலே—யாட்பேரைக்
காணாமலே போயொளிக்குங் கள்ளமனக் காரிகைமார்
நாணவெனும் கட்டளக்கும் நாழியே—வேணபேர்
கொஞ்சிகலஞ் செய்யக் குறிகாரன் வைத்திருக்கும்
வஞ்சியர்க்கு வாய்த்தகன்ன வாசலே—விஞ்சையர்க்

(பிரதி)—1 அயனூரிற்போ. 2 தயவாயன்பொடமுதூட்டும். 3 நெஞ்சடியைத்.

குள்ளமெனு மீன்படுக்கு மொண்டொடியார் மாயவலைக்
கள்ளவிழி மான்படுக்குங் கண்ணியே—துள்ளுதிரை
யூற்றுக் கடிலி லொ[லி]த்த பரவரெல்லாந்
தூற்றுக் குடியில்வந்து சூழாமல்—ஏற்ற
கரைதுறைக ளேழிலுள்ள கண்கார ரெல்லாம்
[1]நிரைதோணி விட்டுநில் லாமல்—ஒருதோணி
மண்டக்க னேராமல் வந்துகுளி யாளாகக்
குண்டக்கன் போய்ப்போய்க் குதியாமல்—அண்டைக்கே
சங்குசிப்பி வாழுமிடந் தான்தேடித் தேடியவன்
மூங்கிமூங்கிப் போய்மூச்சு முட்டாமல்—பைங்கொடியார்
தேன்கொழிக்குஞ் செவ்வாய்ச் சிவந்தபவ ளத்துறைக்கே
தான்கொழிக்கு முத்துச் சலாகமே—வான்செழிக்குஞ்
சந்திரனைக் கீழே தறிநாட்டிப் பின்னையொரு
மந்தரத்தைத் [2]தந்திரமாய் மத்தாகி—அந்தரத்தோர்
பாம்புகயி றாய்ப்பிணித்துப் பாற்கடலைக் கிண்டாமல்
தேம்பியம ரேசர் திகையாமல்—தாம்புதொட்டு
வண்ணமுகில் மேனியான் மத்தெறிந்து காட்டாமல்
தண்ணமுதங் காட்டுஞ் சமுத்திரமே—எண்ணினர்க்கு
மின்னைவிளை விக்குமொரு மேகம்போல் வேணபடி
பொன்[னை]விளை விக்குமொரு பூமியே—உன்னையினிப்
பொன்னென்றோ தங்கமென்றோ பூவென்றோ மாலையென்றோ
யென்னென்றோ வாழ்த்திடுவே னென்கோவே—பொன்னுக்குத்
தோழனுமாம் நல்ல துணைவனுமாம் நீங்காத
கேள்வனுமா மென்பதுநான் கேட்டிருந்தேன்—தோழனை நீ
அண்ண னென்று கோட்டிகொண்டாய் ஆசாரக் கள்ளாவுன்
னிண்ணையங்க ளென்னவென்று செப்பேன்—மண்ணுலகோர்
நாடுகுடி யேறுதற்கு நாட்கால்கள் நாட்டுதற்கு
வீடு குடிபுகுதும் வேளைக்கும்—ஏடுபிடி
[3]கல்விக்குப் போவார்க்கும் கன்னியுங்காப் புக்தொலையச்
செல்வக் கலியாணஞ் செய்வார்க்கும்—நல்லதுநிக்
கையாரைப் போற்றியிரு கையால் நிறைநாழி
வையாமல் தெட்சணைமுன் வையாரே—தையலார்
வாசமணப் பெண்பேசி வாரவரு முன்பேரைப்
பேசியல் லோபணத்தைப் பேசுவார்—ஆசைமனு
நின்னைவிடப் பேசினபேர் நெல்லுடையார் வீடுதொறும்
பொன்னலையக் காதலையப் போயலைவார்—பின்னையுநீ
அந்தரங்க மாக அடுக்களையிற் போய்ப்பணத்தைப்
பந்தலிலே யாடவிட்டுப் பார்த்திருப்பாய்—சந்ததம்
ஆனாலும் பொன்னா லமையாத காரியமும்
தானாக நின்று தரிபிடுவாய்—நீநாட்டிப்
போகாத காரியத்திற் [போவாரார்] பொன்னாலே
யாகாத காரியத்துக் கன்னையென்பாய்—ஓகோகோ
நேயவித்தை போதுல்கில் நீயாடும் வித்தையெரு
மாயவித்தை கண்டாய் வகைகாரா—தாயாக

(பிரதி)—1 நிரைநிரையே தோணிவிட்டுநில்லாமல். 2 தந்தாமாய். 3 கல்விக்கும்.

ஏழுலக மீன்றுளி என்னுனை் கறம்வளர்ந்து
வாழுமக மாயிகுழல் வாய்மொழித்தாய்—சூழ்பெருமை
அத்தனைக்குங் குற்றுலத் தய்யாளைக் கும்படிதான்
நித்த மிருநாழி நெல்லன்றே—உத்தமியார்
அவ்வளவு கொண்[டே]ட அகிலாண்ட முழம்வளர்த்தால்
எவ்வளவென் அன்பெருமை என்னுமியென்—செவ்விய
உன்னைப் படியளந்தார் ஒன்குமலை யாய்வளர்ந்த [ர்]தாம்
பொன்னைப் படியளக்கப் போகாதே—பொன்னுலே
ஊட்ட மெல்லாம் நல்கி உயிர்ப்பயிரெல் லாம்வாழ்த்தும்
வாட்ட மெல்லாம் தீர்ப்பதற்கு வஞ்சகமோ—நாட்டகத்திற்
பொன்னும் பணமும் புலையன் படைப்பானே
அன்னம் படைப்பதுபோல் ஆர்ப்பருகும்—என்னதான்
தாயார்கைப் பொன்னிருந்து[ம்] தன்னைத் தவிடாமோ
தோயாத பொன்னையுன் முன் சொல்லுவதோ—பேயர்போ[ல்]
என்னுமைத் பொன்னை யிகழ்வன்ன டேவுலகில்
உன்னுமைல் வாழு முயிருண்டோ—பின்னுருநெம்
நிலறுகில் பொய்யாமல் நெல்லுமுகம் காணுமல்
காலங் கொடியபஞ்ச காலமாய்—ஞாலமொக்கப்
பேய்புகுந்த காலத்திற் பிள்ளையைத் தாய் பார்ப்பாளோ
தாய்முகத்தைப் பிள்ளைதான் பார்க்குமோ—நாயகமே
சாதிமுறை யுண்டோ தமையனுக்குப் பாதியுண்டோ
நீதியுண்டோ மேல்வரம்பு நிற்குமோ—வீதிதானும்
ஏற்பாரைச் சுற்றமென்றே என்னுவா ரோபிறரும்
பார்ப்பாரைத் தெய்வமென்று பார்ப்பாரோ—நேர்ப்பான
கட்டி வராகனுண்டே கல்லுவகை பொன்பதுண்டே
சட்டியிலே யிட்டவித்தால் சாதமுண்டோ—இட்டிருந்து
பார்த்தாற் பசிபோமோ பாவிமகன் செப்பிவிட்டுக்
காத்தாற் பசிபோமோ கர்மமோ—பூத்தான
நெல்லுமணி யில்லாத நீணிலத்திற் காசுபணம்
கல்லுமண்ணு மல்லவோ காவலவா—எல்லையில்லாய்
பொன்னிலத்தி லேயிருந்து போக்குமுட்டித் தேவரெல்லா
மிந்நிலத்திற் பாற்கடலை யேன்கடைந்தார்—சொன்னமய[ம்]
என்னமயந் தானிருந்து மிக்க மயமாமோ
அன்னமய மல்லவே அப்பனே—பொன்னிருந்து
காவலனுந் தேவியுமாய்க் கன்னிமணஞ் செய்யவென்னும்
ஆவலிரு போதுமன்றைக் குண்ணுமற்—கேவலமாய்
ஓர்பொழுதா யுண்டபல ரெனன்[ே]று சிவசிவா
ஆர்ப்பவோர் அன்றைக் கவர்வருந்தம்—பாரதியுச்
செங்கை பிடித்துத் திருக்கால் பிடித்தகையாற்
கொங்கை பிடிக்கவொரு கூச்சமோ—மங்கலநாள்
என்றுவரு மென்றுவரு மென்றிருந்தார் ராத்திரிபோய்
அன்றுசிவ ராத்திரிபோ லானதோ—ஒன்றுக
நித்திரைவா ராமல் நெடுமூச்சும் ஏச்சுமாய்ச்
சித்திரம்போற் சித்திரம்பூம் பார்வைபோல்—முத்திரைகள்
போட்டிருந்த பொன்போற் புறக்கணித்துப் பார்த்திருக்கும்
கோட்டியெல்லாங் கள்ளாவுன் கோட்டிதான்—ஊட்டமிலாக்

4

கண்டனைய சொல்லாரைக் கண்டாலு மேதுசெய்வார்
உண்டவர்க ளெல்லாம் உரஞ்செய்வார்—மண்டுபெருங்
கற்பூசை போல்நடத்துங் [1]காமகுரு பூசையுன்
[2]னுட்பூசை யில்லாம லோடாதே—நட்புடையார்
பூணழகு கொங்கை புடைத்தழகு காட்டுவதும்
ஊணழகு கண்டா யுடையோனே—வீணழகாய்க்
கொங்கை யிருந்தென் குழலிருந்தென் கோப்பிருந்தென்
மங்கையரில் மோக வடிவிருந்தென்—சங்கையாய்க்
கண்ணிருந்தென் மூக்கிருந்தென் கட்டழகா நீயில்லாப்
பெண்ணிருந்த வீடு பிழையன்றே—கிண்ணமுலை
'காவிவிழி மாதருன்னைக் காணுத கண்ணிலந்தச்
சிவகனைக் கண்டாலுஞ் சீயென்பார்—ஓவாயன்
கண்ணறைய னுறைலுங் காதறையன் மூக்கிழந்த
பண்ணறைய னுறைலும் பாராரோ—வண்ணமற்ற
ஊமனே யானாலும் உன்பெருமை கண்டபெண்கள்
காமனே யென்றடப்பங் கட்டாரோ—கோமளமாய்
அத்தையார் நாணுரோ அங்ஙனே நாலாறு
மைத்துனிமார் வட்டமிட்டு வாராரோ—முத்தனையார்
மஞ்சட் குளியழகோ மையழகோ பொட்டழகோ
கொஞ்சத் தலைகவிழ்ந்த கூச்சமோ—கெஞ்சியவன்
வீசகலை தொட்டவுடன் மெல்லணையி லேஅவதோ
கூசுதலைப் பேச்சோ குனலமோ—பே[ை]சயிலே
சேலைத் தலைகிழுஞ் சித்திரமோ கொத்துமலர்
மாலைக் குழல்சரியும் மாற்கமோ—மேலுமவர்
கட்டு[ெ]மட்டுங் காணவிரு கண்கொளுமோ கண்பகட்டி
வெட்டிவிட்ட பார்வையிலே மெய்சோர்ந்தால்—கெட்டிகெட்டி
எங்கே நினைத்தீர் எவள்மேலே சிந்தைவைத்தீர்
அங்கே யுமக்கவள்மே லாசையோ—மங்கையர்சொற்
பொய்யென் றிருந்தேன் புருஷரையும் நம்புவரோ
மையல்கொண்ட கள்ளிக்கு வாயினியேன்—அய்யய்யோ
உண்டோ வி[ை]தப்பா ருடனே கண் ணீரும்வருங்
கெண்டையங்கண் சொன்னபடி கேட்குமே—ஒண்டொடியீர்
தாபமோ தந்தமனத் [3]தாபமெனுங் கன்னியிதழ்
கோபமே தந்தாற் குணங்கண்டீர்—பாவமோ
பன்னீர்க் குடமிரு[க்]கப் பச்சிளநீ ரங்கிருக்க
வெந்நீர் கொடுத்தால் விடாய்போமோ—[4]மின்னூர்கள்
தேர்முந்தக் காண்பதொரு செந்தமிழ்க்கோ வைத்துறைக்குக்
கார்முந்தக் காண்பதுண்டோ காரிகையீர்—நீரினித்தான்
பார்த்தருளீ ரென்றவுடன் பாசாங்கு மாய்க்குடில
வார்த்தையுமா யங்கே மனந்திரும்பச்—சேர்த்ததுடை
காலோடு கால்பிணையக் கைகள்முடி மேற்பிணைய
மேலோடு வண்டால் விளக்கணையச்—சேலையொரு
தட்டவிழ வச்சிரமணி தைக்குமரை யிற்கொடிகள்
கட்டவிழ வட்டமுலை கச்சவிழ—விட்டமதன்

(பிரதி)—1காமங்குரு பூசையுன்னுடைய. 2யுயிர்ப்பூசை. 3தாபமெனுங். 4முன்னூர்கள்.

முத்தூர் மனைக்குளொரு முத்தமிடு மட்டொருகை
எத்துதட லத்தொனியெ டுத்தெறிய—நித்திரையை
விட்டபுல விக்கொருவி தத்தொழிலெ டுத்துநய
மிட்டதுசி கத்தைவிலை யிட்டெழுத—வட்டமிடு
கொங்கையென்ப தும்புழைந்து கொண்டையென்ப துஞ்சரிந்து
சங்கை[யின்ப] மிஞ்சுகிதென் று சங்கலம்ப—மங்கைதங்க
நூல்மருங்கு வாடுதென்று நூபுரங்கள் வாய்புலம்ப
மேலெழும்பு போகமுங்கை மீறுதென்று—பாலெனு[ஞ்]சொற்
கத்துத் தமிழ்தெனுங்கு கன்னடிய மூங்குழறிப்
பத்தொன்ப தாம்பாகை பாவிக்க—முத்தாடைக்
கொங்கையிட்ட வாடை குமிரென்ன நெற்றியிலே
சங்கையற்ற வேர்வை சனிரென்னச்—செங்கையொலி
பட்ட தடனம் பனிரென்னத் தொட்டிழுக்கி
விட்ட சரீரம் விரிரென்ன—எட்டியுதை
காலிற் சிலம்பு கலிரென்ன மேனியெல்லாஞ்
[1]சிலித்து ரோமஞ் சிலிரென்னப்—பாலிக்கும்
ஆலிங் கனமைந்து மாரமுதம் பிற்கும்பிலே
பாலிங் கனமோர் பதினறும்—மேலதா
பானம் பதினென்றும் பண்பாய் நகமெழுதுந்
தானங்க ளேழுந் தடனமெட்டு—மானப்
பறவைக் குரல்களெட்டும் பாங்காக் காணை
மறுபத்து நாலு ம[ண்]டவாய்—முறைமைவைத்து
வித்தையா டுங்கலக வேசையர்கள் மோகமெல்லாம்
முத்தையா வுன்மீதில் மோகங்காண்—கத்தனே
உன்னை யுடையார் உலகுடையா ரல்லாமல்
பின்னை யுடையார் பிறருண்டோ—மன்னர்
பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்ப
ரலகுடை நீழ லவரென்—றுலகுடைய
வள்ளுவர்தான் சொன்ன மறைநூல் விதியதனைத்
தள்ளுவார் தாமுண்டோ தாரணிமேல்—தெள்ளிமையா
யோதுவா ரெல்லா முழுவான் தலைக்கடைக்[கெ]கன்
றேதுவாய்ச் சொன்னமொழி யேற்குமே—மோதுகுடை
பாலும் பவிஷ[துவு]ம் பண்ணையும் பாக்கியமும்
மேலும் பயிர்க்கோர்வை மீசாமும்—நாலுதிக்கில்
நெல்லும் பணமும் நிலங்களும் பாவிடும்
வல்லியரும் செல்வநடை மைந்தர்களும்—நல்ல
முடுக்குப்பல் லாக்கேறு முற்கமுந் தங்கக்
கடுக்கனீ டுந்தரலைக் கட்டும்—எடுப்பான
பெருளவர் வாழும் பெருப்பெருத்த வாழ்வெல்லாம்
வாருதியே நீகொடுத்த வாழ்வுகாண்—போராடச்
சாரி நடத்துந் தளகர்த்தர் பின்குழுக்
[2]காரியக் காரர்வந்து காத்துநிற்க—நேரே
திறையிடுவார் கோடி செகவேந்தர் கோடி
நிறைதளமாய் வந்து நெருங்க—நிறைகொலுவில்

(பிரதி)—1 சிலிர்த்து. 2 காரிகைக்.

பத்திபத்தி யாகப் பகல்வத்தி நின்றிலங்க
முத்துமுத் தாய்க்கொலுக முன்னிலங்க—வுத்துங்கா
செய்யா வரிசை யிடச்செய்யு மாதிக்கம்
அய்யாவுன் றுதிக்க மல்லவோ—வையகத்தோர்
கும்பிடுவார் மன்னரிலே கோவேயுன் னன்னமெனுந்
தம்பிதனைக் [1]கும்பிடார் தாமுண்டோ—சொம்பாக
நெற்கணக்குக் கேட்டு நிலவழியு மானிபமும்
[2]சொற்கணக்கும் தீர்வைத் துகையுங்கேட்—டெற்குளசொன்
னையர் கூட்டு பருக்கை யனுசரித்து
மீதாம் விசேள வகைகூட்டு—மாதாந்தம்
தன் தவணை கூட்டு தலத்துச் செலவுதள்ளுப்
பின் தவணை கூட்டிப் பிசகுதள்ளு—முன் தவணைக்
குத்தார மென்ன வொடுக்கென்ன தண்டலென்ன
சுற்ற நிலுவையென்ன சொல்லென்று—மொத்தத்
தவணையாய்க் கூட்டித் தலமணிய கார
ரவரவரை யெல்லா மதட்டி—யிவரவரே
யென்மணிய முன்மணிய மென்பார் மணியமெல்லா
முன்மணியங் கண்டா யுடையோனே—நன்மணியச்
சம்பிறுதி யென்றுந் தலத்துக் கணக்கென்றும்
அம்பலஞ்செ யத்தாந் தாமென்றும்—வம்பளக்கும்
எத்துவழி யென்றும் எதிர்கணக்குங் கைவளையும்
அத்தகங் கூட்டமிடு மங்கணத்தில்—ஒத்தெழுத்தும்
அட்டவணை யோவிரசோ ஆயக்கட் டோவொழுகோ
பட்டோலை யோதீர்வைப் பஞ்சரிப்போ—கெட்டோடே
ஆயிரம்பொன் கூட்டுவதோ ஆயிரம்பொன் பிள்ளையும்நீ
போயிருந்தா லில்லையெனப் போவதோ—நீயிகழ்ந்தால்
அத்தனையுங் கூட்டுவதோ ஆறிவார் உன்னுடைய
சித்து விளையாட்டார் சீமானே—மெத்தவுனைக்
கொண்டுகட்டுஞ் செட்டிகளும் கோட்டைக்குக் கால்வாசி
கண்டுவெட்டி வாங்குகன வர்த்தகரும்—மண்டுகடற்
கப்பல்வியா பாரிகளும் காசுபடைக் கும்பெருமை
யப்பனே யுன்பெருமை யல்லவோ—ஒப்பனைக்குச்
செப்பாடல் வட்டமென்றுஞ் சித்தறுதல் வட்டமென்றும்
வைப்பா மிடைக்குறைச்சல் வட்டமென்றும்—*ஒப்பாத

* * *

பிள்ளைக்கு வட்ட[ம்] பிடுங்கலுக்கு வட்டமென்றும்
கள்ளனென்றுஞ் சோர்வைக் களியென்றுங்—கொள்ளையாய்
எண்கோடி சொல்லி யிரைக்குகோட் டக்காயர்
கண்கூ லியுமுனதுங் கைக்கூலி—பண்கூட்டுந்
தித்தி யடக்கிச் சிறுமத் தளமடக்கி
கைத்தாள மென்றுசந்தே கைகாட்டி—எத்து

(பிரதி)—1 கும்பிட்டார். 2 சொற்கணக்குமயுத் தீருவைத் துகைகேட்டு வெற்குளசொன்.

*இதனை யடுத்து மூன்று பக்கங்கட்குமேல் வெற்றேடு காணப்படுகின்றது; சுமார் 20 கண்ணிகள் விடுபட்டிருக்கலாம். ஆனால் பொருளின் தொடர்ச்சியை நோக்கும்போது ஒரு சில கண்ணிகளே விடுபட்டிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

முகவணையைச் சேகரித்து மொய்த்தசபை யூடே
மிகவிருது பாத்திரத்தை விட்டு—முகவணையின்
மிச்சவொலி தாளவொலி மேளவொலி மூன்றுமவன்
கெச்சவொலிக் குள்ளே கிடந்தொலிப்ப—வச்சிதமாய்
ஆடலுங் கூத்து [1]மவிநயமும் பாவபசப்
பாடலுமா கத்துரைமுன் பாராட்டிச்—சூடகக்கை
மேலாடக் காமுகர்முன் மெய்யாட நாடகத்திற்
காலாடக் காரியத்திற் கண்ணாடச்—சேல்விழியார்
தாமாட நட்டுவனைத் தானொருபா லாட்டுவிப்பாய்
கோமாளிக் கூத்துநல்ல கூத்துக்காண்—ஆமொருவன்
பேரெழுதி நல்ல பிரபந்தக் கொத்தெழுதிச்
சீருடைய நாட்டுச் சிறப்பெழுதி—நேரமெல்லாம்
ஏடுவைத்துப் பாடி எழுதியெழு திக்கிறுக்கிச்
சோடுபெற்ற சொல்லிலொரு சொற்பிழைத்தால்—வாடியே
யேடொருக்காற் பார்த்தும் எழுத்தாணி யைப்பார்த்தும்
வீடொருக்காற் பார்த்து வெளிபார்த்தும்—பாடுபட்டுத்
தேடியொரு சொல்லாய்த் தெரிந்தெடுத்துச் சேகரித்துப்
பாடியரங் கேற்றிப் பரிசுபெற்றுக்—கூடிநின்று
பாவேந்தர் கொண்டாடும் பாராட்டுஞ் சீராட்டுங்
கோவேந்தே வுன்னுடைய கொண்டாட்டு—மேவரிய
இந்திர சாலவித்தை [2]யேத்தரிய நோக்குவித்தை
யந்தரமாய்ப் பொய்க்காலி லாடும்வித்தை—மந்திர
வாதவித்தை யாகாச மார்க்கமுதல் வித்தையெல்லாம்
வேதவித்தை நீபடைத்த வித்தைகாண்—வாதங்கள்
செய்வார் பிழைப்பும் திருடியலை வார்பிழைப்பும்
வைவாரைப் போற்றிரி வார்பிழைப்பும்—பொய்வார்த்தை
சொல்வார் கொடும்பிழைப்புஞ் சூதாடி வாதாடி
வெல்வார் பிழைப்பும் வெறும்பிழைப்பும்—புல்லறுத்து
விற்பார் பிழைப்பும் விலைப்பட்டுத் தொண்டுபண்ணி
நிற்பார் பிழைக்கும் நிலைப்பிழைப்பும்—அற்பராய்ப்
பஞ்சுக் குலாமர் பதிதோறுஞ் சென்றுசென்று
கெஞ்சித் திரிவார் கெதிபிழைப்பும்—தஞ்சமற்றோர்
எல்லார் பிழைப்பும்நீ யில்லா வயிற்றளவும்
பொல்லாப் பிழைப்பலவோ புண்ணியா—செல்லாச்
சதிசாம மந்திபகல் சாகரத்தி னூடே
மதியாமற் கப்பல்விடு வாரும்—உதையாதி
துஞ்சவிட மில்லாமற் சோறுண்ண [நேர]மின்றி
யஞ்சலிலே யோடி யலைவாரும்—மிஞ்சுமலை
அட்டைகடி வாய்[க்]கடிக்கும் அஞ்சாமற் காட்டுமரம்
வெட்டி விறகெடுத்து விற்பாரும்—வட்டிக்கிட்
டன்னியரை யெல்லாம் அருவட்டி வாங்கியுள்ள
பொன்மலியக் கீழ்வழி போவாரும்—என்னசெய்தும்

(தொடரும்)

(பிரதி)—1மன்புயமும். 2யேற்றறிய.

சமரச சன்மார்க்க போதம்

(தொடர்ச்சி)

167. 'சமயங்கள் பல' என்று கொண்டு, மெய்ச் சமய பொய்ச் சமய வாதங்களைத் தொடுத்து, ஒரு சமயம் விடுத்து மற்றொரு சமயம் புகுதலும், அதற்கெனக் கிரியைகள் முதலியன செய்தலும் உலகில் பல விடங்களில் நடந்து வருகின்றன. அவை இயற்கையின் போக்குக்கு அரண் செய்வன அல்ல.

168. இறை ஒன்று. அஃது எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது. அஃதில்லா இடம் இல்லை. எங்கே போனாலும் எங்கே வந்தாலும் அங்கங்கே இருப்பது ஓர் இறையே. உண்மை இவ்வாறாக எதை விடுத்து எங்கே போதல் என்பதும், எதைக் கொண்டு எங்கே வருதல் என்பதும் விளங்கவில்லை!

169. உலகில் சமயங்கள் பலவாயிருந்து, அவைகளில் மெய்பொய்ச் சமயங்களிருக்குமாயின், இயற்கைப்படைப்பில் 'இது மெய்ச் சமயம்' என்னுங் குறி எம்முறையிலாதல் பொறிக்கப்படும். இயற்கைப் படைப்பில் அத்தகைக் குறி ஒன்றையுங் காணோம். இதனால் இயற்கைச் சமயம் ஒன்றே என்பது தேற்றம்.

170. மக்கள் பிறந்த பின்னரே மற்றவர்கள் சேர்க்கையால் தங்களை அம்மதத்தார் இம்மதத்தார் என்று சொல்லிக் கொள்கிறார்கள். பிறக்கும் போது அவர்கள் எச்சமயக் குறியுடனும் பிறப்பதில்லை.

171. மதவாதம், மதமாற்றம், மாற்றத்துக் கெனக் கிரியைகள் முதலியன புரோகிதர்களால்நிறுவப்பட்டன. இயற்கைச் சன்மார்க்கத்துக்கு மத வாதமோ மதமாற்றமோ கிரியையோ ஒன்றும் வேண்டுவதில்லை.

172. பல சமய உணர்வு கொள்வது தவறு. அவ்வுணர்வு ஒருசமயம் விடுத்து மற்றொரு சமயம் புக இடம் பெறுதலால், அஃது ஒரு கடவுளைப் பல கடவுளாகப் பாவிக்கவும், இயற்கைப் படைப்பை அவதூறு செய்யவும் தூண்டுவதாகிறது.

173. மனந் திரும்புதற்கு மத வாதமோ மதமாற்றமோ அதற்கெனக் கிரியைகளோ வேண்டுவதில்லை. மதவாதம் முதலியன மனந் திரும்புதற்குத் துணை செய்யாமல் பிடிவாதத்துக்கே துணை செய்யும்.

174. மக்க ளிடத்தில் பொதுவாக இருவித நிலைகள் இருக்கின்றன. ஒன்று பேய் நிலை; மற்றொன்று தெய்வ நிலை. பேய் நிலை தீயகுணங்களின் உறைவிடம்; தெய்வ நிலை நல்ல குணங்களின் உறைவிடம். பேய் நிலையை ஜீவ போதம் என்றும், தெய்வ நிலையை ஜீவபோதம் அற்றது என்றும் சுருங்கச் சொல்லலாம். பேய் நிலையினின்றும் தெய்வ நிலை அடைவது மனந் திரும்புவதாகும். இதற்குச் சன்மார்க்க மெனும் ஒரு சமயம் இயற்கையில் அமைந்திருக்கிறது. உள்ள அவ்வொன்றில் போதல் எங்கே? வருதல் எங்கே?

175. மதவாதமும், மத மாற்றமும், கிரியைகளும், இன்ன பிறவும் பேய்நிலையை நீக்கித் தெய்வ நிலையை நல்குகின்றனவா என்பது கவனிக்கத் தக்கது. இவைகளால் அம்மாறுதல் நிகழ்வதில்லை என்பது வெளிப்படை.

176. கல்வி கேள்வி ஆராய்ச்சிகளாலும், நல்லோர்சேர்க்கையாலும், இன்ன பிறவாற்றாலும் மனம் படிப்படியாக மாறுதல் அடைந்து கொண்டே போகும். மனமாற்றமாவது அறிவுப்படி ஏறுவது. இஃது உள்நிகழ்ச்சி.

177. உள்நிகழ்ச்சி நொடிக்கு நொடி மாறுவதும் உண்டு. இது மதம் மாறுதல் என்று சொல்லப்படின், உலகில்

எத்துணை மதங்கள் தேவையா யிருக்கும்? ஒவ்வொருவனுக்கு ஒவ்வொரு போதா ஒவ்வொரு மதம் வேண்டுமன்றோ? இதைக் கொண்டே சமயம் பலவாக இருத்தல் அரிது என்று ஊகித்து உய்த்துணரலாம்.

178. மதங்களைப் பலவாக் கொண்டு, மத வாதத்திலும் மத மாற்றத்திலுந் தலைப்படுவதால் விளையுந்தீங்குகள் பல. அவ்வம் மதத்தார் தம்தம் மதத்தின் ஜனத்தொகையைப் பெருக்கவே முயல்வர். அம் முயற்சியால் மக்களிடை எழும் எரி, கொலைவரை பொங்கி எழுவதை உலகம் பலமுறை அநுபவித்திருக்கிறது. எரியைத் தூண்டும் மதவாதமும் மதமாற்றமும் கடவுள் நெறியாகா. எரிஅற்ற இடத்தில் திகழ்வது கடவுள் நெறி.

179. மத வெறியால் கொலை செய்யப்புகுவோன், தன்னை வேறாகவும், தன்னால் கொலை செய்யப்படுவோனை வேறாகவும் நினைக்கிறான். தன் உயிரினும் மற்றவன் உயிரினும் ஈசன் ஒருவனே இருக்கிறான் என்னும் உணர்வு மதவெறியவிடத்தில் விளங்குவதில்லை. தன்னுயிரைப்போல் மன்னுயிரைப் பார்க்குஞ் சகோதர நேயமே கடவுள் நெறியில் நிற்பதற்கு அறிகுறி யாகும். மத வெறியை எழுப்பும் மதவாதமும், மத மாற்றமும், இன்ன பிறவும் சகோதர நேயத்தை வளர்த்தல் அரிது. ஆகவே, மதவாதம் மதமாற்றம் முதலியவற்றில் தலைப்படாது பேய் நிலையினின்றும் தெய்வநிலைக்கு மனதைத் திருப்பவல்ல கடவுள் நெறியெனுஞ் சன்மார்க்கத்தில் நிற்க மக்கள் முயலல்வேண்டும்.

180. மனந் திரும்புதல் ஒருநாளில் இருநாளில் புறக்கிரியைகளால் நிகழ்ந்து விடாது. மனம் மாறிமாறி வளர்ந்து போகும் இயல்பினது. அவ்வளர்ச்சி மெய்யறிவு விளங்கும்வரை செல்லும்.

181. மக்கட்கு மெய்யறிவு விளங்கும்வரை இடை இடையே ஒன்றைப் பற்றிய நம்பிக்கையும் அவ நம்பிக்கையும் மாறிமாறித் தோன்றித் தோன்றி மோதிக் கொண்டே யிருக்கும். அவ் வப்போது உற்றுவரும் மாறுதலால், அவரவர் மனநிலைக்கேற்ற வண்ணம் நம்பிக்கைகள் பல திறத்தனவாய்ப் பிறத்தல் இயல்பு. அவரவர் நம்பிக்கை வழி அவரவர் நடக்க அவரவர்க்கு உரிமை இருத்தல் வேண்டும். அவ்வுரிமையைப் பலாத்காரத்தாலோ சம்பிரதாயங்களாலோ இன்ன பிறவற்றாலோ இடர் செய்தல் தவறு.

182. இறை அப்பன் உரிமையோடிருக்கிறான்; இயற்கை அன்னை உரிமையோடிருக்கிறாள்; ஆகவே உயிர்களும் உரிமையோடு உலகில் வாழ்தல் வேண்டும்.

183. மெய்யறிவு விளங்கும் வரை ஒருவன் நம்பிக்கை இன்னொருவனுக்கும், இவன் நம்பிக்கை அவனுக்கும் மாறாகத் தோன்றுதல் கூடும். இத்தோற்றத்தால் ஒருவன் ஒருவனைத் தன் தன் வழியில் திருப்பும் முயற்சியும் அவன் அவன்பால் எழுதல் கூடும். இவன் தவறான வழியில் செல்கிறானென அவன் இரங்கியும், அவன் தவறான வழியில் செல்கிறானென இவன் இரங்கியும் ஒருவனை ஒருவன் திருப்பமுயல்கிறான். இதற்குப் பலாத்காரம் அநாவசியம். உண்மை இரக்கம் பலாத்காரத்தில் இறங்கச் செய்யாது. பலாத்காரம் எழுமிடத்தில் நியாயமிராது. பலாத்காரத்தால் ஒருவரை ஒருவர் திருப்ப முயல்வது காட்டு மிராண்டிச் செயலாகும். அன்பில் நின்று ஒருவன் தான் உண்மை யென்று நம்புவதை மற்றவனுக்கு அறிவு கொளுத்த முயல்வது நாகரிகம். அன்புப் போதனையால் திரும்புவோர் திரும்புக; திரும்பா திருப்போரிருக்க. எதற்கும் எவர்க்கும் உரிமையிருத்தல் வேண்டும். உரிமை, பலாத்காரத்தால் பாழ்படலாகாது.

184. மத வெறியால் விளையுங் கேடுகளைக் காணுஞ் சிலர், கடவுள் நெறியே இக்கேடுகளுக்குக் காரணமாக நிற்றலான், அந்நெறியே வேண்டாம் என்று சொல்வதுண்டு. மதவாதிகளின் செயல்கள் இவர்களை இவ்வாறு சொல்லவும் நடக்கவும் செய்கின்றன. கடவுள் நெறி இயற்கை என்று மேலே சொல்லப்பட்டிருக்கிறது. இதை உணர்வோர், மத வெறிக்கும் கடவுள் நெறிக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்பதை எளிதில் தெளிவர்.

185. மத வெறியை வெறுத்து ஒதுங்குவது விரும்பத் தக்கது. ஒதுங்கும் அளவுடன் நில்லாது கடவுள் நெறியெனுஞ் சன்மார்க்கத்தில் நிற்க உறுதி கொள்ளல்வேண்டும். தீமையை வெறுப்பது நன்மையைக் கடைப்பிடிப்பதாகாது. நன்மையைக் கடைப்பிடிப்பது தீமையை வெறுத்தொழிப்பதாகும். நன்மையைக் கடைப் பிடிப்பது சன்மார்க்கத்தில் நிற்பதாகும். சன்மார்க்கத்தில் நிலவாவாழ்வு சிறையுண்ட நீர் (Stagnantwater) போன்றதாகும்.

186. சன்மார்க்கத்துக்கு நாடு மொழி முதலிய வேற்றுமைகளில்லை. அது மன்பதைக்குப் பொதுவா யிருப்பது.

187. சன்மார்க்கத்தில் நின்று நாடு மொழி முதலிய வற்றிற் பற்றுக் கொள்ளலாம். சன்மார்க்கத்தில் நில்லாது வெறும் நாடு மொழி முதலியவற்றைத் தனிமைப்படுத்தி, அவைகளிடத்துப் பற்றுக்கொள்வது உலக சகோதர நேயத்தைக் கண்டப்படுத்துவதாகும். அதனால் மன்பதையில் போராட்டமே பெருகும்.

188. நாடு மொழி முதலியவற்றிற் பற்றுச் செலுத்தல் கூடாதென்பது சன்மார்க்கத்தின் கருத்தன்று. அப்பற்று மற்ற நாடு மொழி முதலியவற்றினிடத்துப் பொறாமை எழுப்பிப் பகைமை விளைப்பதா யிருத்தல் கூடாதென்பது சன்மார்க்கத்தின் கருத்து. சன்மார்க்கம் நாடு மொழி முதலியவற்றைக் கடந்து நிற்றலான், அதில் ஈடுபட்டு நாடுமொழி முதலியவற்றிற் பற்றுச் செலுத்தினால், உலக சகோதர நேயத்துக்குப் பங்கம் நேராது.

189. எல்லாநாட்டார், எல்லா மொழியார் முதலிய எல்லாரிடத்திலும் வீற்றிருக்கும் சத்தெனும்பொருள் ஒன்றே என்று உணர்த்தும் ஆற்றல் சன்மார்க்கத்துக் கிருத்தலான், அம்மார்க்கத்தில் நின்று, நாடுமொழி முதலியவற்றிற் பற்றுக் கொள்வதால் பிரிவு உணர்வு எழுதற்கு இடமில்லாமற்போகிறது.

190. எல்லா உயிர்களிலும் வீற்றிருக்கும் பரம்பொருள் ஒன்றே என்று உணர்த்துவது சன்மார்க்கமாதலின், உலகில் சமரச ஞானத்தை வளர்ப்பதற்கு அதுவே சிறந்த கருவியாகிறது. அச்சிறப்பு அதன் மாட்டிருத்தலான், அது 'சமரச சன்மார்க்கம்' என்று வழங்கப்படுவதாயிற்று.

191. சமரசம், வாழ்விற்கு இன்றியமையாதது. அது சகோதர நேயத்தை வளர்ப்பது. சமரச நோக்கு இல்லாவிடத்தில் சகோதர நேயம் பிறத்தலும் அரிது. சகோதர நேயத்துக்கு அடிப்படை சமரசம். அச்சமரச நோக்கை எளிதில் கூட்டவல்லது சன்மார்க்கம் ஒன்றே.

192. 'எவ்வுயிரும் ஆண்டவன் கோயில்' என்னுஞ் சமரசசன்மார்க்க உணர்வின்றிப் பேசும் சகோதரநேயம் பொருளற்றதொன்று. அது சிலரை நேசிக்கவும் சிலரைப் பகைக்கவும் தூண்டுவதாகும்.

193. உலகில் அமைதி வேண்டும். அமைதிக்குச் சகோதர நேயம் வேண்டும். சகோதர நேயத்தை நாடு, மொழி நிறம், வகுப்பு, பல மத உணர்வு, முதலிய பிரிவுகள் குலைத்து விடுகின்றன. ஆகவே நாடு மொழி முதலியவற்றைக் கடந்த ஒன்று சகோதர நேயத்துக்கு அவசியந் தேவை. அஃது எல்லா நாட்டார் எல்லா மொழியார் முதலிய எல்லார்க்கும் பொதுவா யிருத்தல்வேண்டும். அஃது எது? அஃது எல்லா உயிர்களிலும் வீற்றிருக்கும் சத் ஒன்றே

அதை உணர்த்தும் இயற்கைநெறி சன்மார்க்கம் என்பது. அச்சன்மார்க்கம் ஒன்றே நாடு மொழி முதலிய பேதங்களைநீக்கி, அபேதத்தை நிலை பெறுத்திச், சகோதர நேயத்தை வளர்த்து, அமைதி இன்பத்தை வழங்கவல்லது.

194, எல்லா உயிர்களிலுமுள்ள சத்தெனும் இறையைக் கலை ஞானத்தால் அறிவது ஒரு வழி; மெய்ஞ்ஞானத்தால் தெளிவது மற்றொரு வழி. கலைஞானத்தளவில் நின்று விடுவது வாழ்வின் நோக்கத்தை நிறைவேற்றுவதாகாது. மெய்ஞ் ஞானத் தெளிவுப் பேறே வாழ்வு நோக்கத்தை நிறைவேற்றுவதாகும்.

(தியானம்)

195. மெய்ஞ்ஞானத் தெளிவுக்குப் பல முறைகள் அமைந்திருக்கின்றன. அவைகள் யாவும் நாட்டின் இயல்பு மக்களின் இயல்பு முதலியவற்றிற் கேற்ற வண்ணம் அமைந்துள்ளன. அவைகள் எல்லாவற்றிலும் ஊடுருவிப் பொதுவாக நிற்பது தியானம்.

196. ஒளி உடலுக்கு எங்ஙனம் இன்றி அமையாததோ, அங்ஙனமே தியானம் உயிருக்கு இன்றி அமையாதது.

197. தியானத்தின் முதிர்ச்சியில் ஒருவித அமிழ்தம் பிறக்கும். அஃது உயிரையும் உயிர் வழி உடலையும் ஓம்பும். அவ் வமிழ்தம் பிறத்தலும் தெரியாது; உணவாதலுந் தெரியாது. அஃது உயிருக்கும் உடலுக்கும் வழங்கும் ஆறுதலால் அதன் தன்மையைமட்டும் உணர்தல்கூடும். தொடக்கத்திலேயே தியானம் எளிய முறையில் ஒருவித ஆறுதலளிப்பது வெள்ளிடைமலை.

198. உடல் நலனுக்கும் உயிர் நலனுக்கும் தியானம் இன்றியமையாதது. அலையும் மனதுக்கும், அதன் வழியுழலுங் கருவி கரணங்கட்கும், பிற உறுப்புக்கட்கும் தியானம் உதவும் நலனை அநுபவத்தில் உணரலாம்.

199. தியானம் தியானயோகம் எனவுஞ் சொல்லப்படும்.

200. யோகம் என்பதற்கு ஒன்றல் என்பது பொருள்.

201. யோகம் என்பது 'மூச்சை அடக்குவதுதான்' என்று சிலர் கருதுவதுண்டு. மூச்சைப் பிடிக்கும் முறைகள் எல்லாம் யோகங்கள் ஆகா. வழிதுறையின்றி மூச்சைப் பிடிப்பதால் பலஇடர்கள் விளைவதுமுண்டு.

202. யோக வகைகள் பல. அவைகளை இரண்டு இனமாகப் பிரிக்கலாம். ஒன்று மலயோகம்; மற்றொன்று அமலயோகம்.

203 மலயோகம் உடல் நலன் கருதி முயன்று வலிந்து செய்வது. மூச்சை ஈர்த்தல் நிறுத்தல் விடுதல் முதலியன மல யோகத்தின் பாற்பட்டன. இவைகளில் தவறுதல் நேரின் உடலுக்கே ஊறுநேரும். ஊனை வமாற்றவுஞ் சிலர் மலயோகம் பயில்வதுண்டு. தீயொழுக்கத்துக்குஞ் சிலர் அவ்யோகம் பயில்வதுண்டு. மலயோகம், தக்கார் மாட்டுக் கேட்டுப் பயின்று ஒழுங்காகச் செய்யப்படின், அதனால் உடலுக்கு நலனில்லாமற் போகாது. மலயோகத்தால் ஆத்மஞானங் கைகூடாது. மலயோகிகள் ஆத்மஞானிகளல்ல.

204 அமலயோகம் வலிந்து முயன்று செய்வதன்று. அஃது இயற்கை வழி இயங்குவது. அதற்கு மூச்சைப் பிடித்தல் முதலியன வேண்டுவதில்லை. அதனால் உடலுக்கோ உயிருக்கோ தீங்கு விளையாது. அஃது உடலையும் உயிரையும் ஓம்பும்; ஆத்மஞானத்தைக் கூட்டும். அமலயோகம் எழுத்தால் எழுதிக் காட்டக்கூடியதன்று.

205. தியானம் முதிர முதிர அநுபவத்தில் இயல்பில் அமல யோகம் படிப்படியாகக் கூடும். ஆகவே அமல யோகத்தைப் பற்றிச் சிந்திக்கவும் வேண்டுவதில்லை. தியானத்துக் குரிய அடிப் படையான துறைகளில் வாழ்வைப் பண்படுத்தித் தியானத்தில் தலைப்பட முயல்வது ஒழுங்கு.

206. மேலே குறிப்பிட்ட உடலோம்பல், கல்வி, இல்லறம் முதலியவற்றினின்றும் பரிணமிப்பது தியானம். தியானம் உயிர்; அதற்குரிய உடலுறுப்புகள் உடலோம்பல் முதலியன. இவைகளுடன்குறித்த ஒன்றைக் குறித்தகாலத்தில் செய்து பண்படல், அகப்புறத் தூய்மை, வாய்மை, தன்னலம் பாராட்டாமை, பிறர் பொருளை இச்சியாமை, உயிர்களிடத்து இரக்கம், உள்ள நிறை, அடக்கம், பொறை, நடுநிலை, எரிபகை எழாமை, மன்னிப்பு, செய்த தீங்குகட்கு வருந்தி வருந்தி அழுதல், அவ்வழுகையால் மீண்டும் தீங்குகட்கு ஆளாகாத உறுதியும் ஆற்றலும்பெறுதல்ஆகிய இயல்புகளும்வேண்டற்பாலன. தியானம் என்னும் நிலையம் எழுதற்கு இவைகள் சாரங்கள்போன்று துணை செய்வன. இவ்வியல்புகளை வாழ்வில் பெறுமல் தியானத்தி லமர்வதால், தியானம் சித்தியாது; அத்தியானம் குலைந்து குலைந்து போகும். ஆகவே அவ் வியல்புகளைப் பெறும் முறையில் வாழ்வு நடாத்திப் பண்படல் வேண்டும்.

207. தியானத்தில் அமரும் முறையிலும் தியானத்திற்குத் துணைசேரும். இதற்குப் பலதிற ஆசனங்கள் சொல்லப்படுகின்றன. அவைகளில் பத்மாசனம்சாலப்பொருந்தியது. பத்மாசனம் நாடி நரம்புகளை ஒழுங்கில் நிறுத்தித் தியானத்துக்கு அரண் செய்யும்.

208. தியானத்துக் குரிய சிறந்த இடம் இயற்கை வெளி. காற்றும் ஒளியும் அமைதியும் குறைபடாத வேறிடங்களும் தியானத்துக்கு உரியனவாம்.

திரு. வி. கலியாணசுந்தரன்.

(தொடரும்)

சு ந் த ர சு லோ ச னா

[திரு. டி. ஆர். சாரங்கபாணி, எம். ஏ.]

(உரிமை ஆக்கியோருடையது)

(தொடர்ச்சி)

"ஒரு வேளை அவர் என் காதலைத் தேடித் திரிகிறார்போலும். சாரதா! உலகிடை இன்பமுந் துன்பமும் மாறி மாறி வரும் என்னும் மெய்யுரை என்பால் மெய்த்தது. இளமையில் அன்னையை இழந்தயான் அன்னையின் அருமையை யறியேன். ஆதலான், அவ்வளவாக வருந்தினேனில்லை. அண்ணாவுடனும், என் அன்பருடனும் உத்தமத் தோழியாகிய உன்னுடனும் தந்தையின் பேரன்பு உடன் சூழ இன்பத்தில் திளைத்து நின்ற எனக்கு, அண்ணா அன்றிரவு ஒருவரிடமுங்கூறாது மறைந்தது பெருந்துயரையே பளித்தது. அதுகாறும் இன்பத்தையே நுகர்ந்த யான் துன்பச்சுவையை உய்த்துணர்ந்தேன். சென்ற ஓராண்டாக அத்துயரம் நம்மை வாட்டியும், என உயிரினு முயர்ந்தோர் நமக்கிருந்தது பெரும் ஆறுதலாகவே இருந்து வந்தது. சாரதா! என் காதலர்க் கேதாகிலுந் தீங்கு நேரிட்டதோ? ஒருகால் அவர் என்மீதும் வெறுப்புற்றாரோ? ஆ! ஈச! அவர் என் மீது வெறுப்புற யான் சகியேன். அந்நிலையில் அவருக்கு வெறுப்பை மூட்டி, அவரை வாட்டி இருந்தலினும் யான் இறத்தலே சாலவும்நன்றாகும். சாரதா! அவருடைய வெறுப்பையான்சகியேன்.

தோழி! அவர் என்னை வெறுக்கக் காரண மென்ன?"

"நங்காய்! பிரிவாற்றுமையான் நீ வாயில் வந்தவாறு பிதற்றல் நன்றன்று. அவர் உன்னை வெறுத்தே வீடு நீத்துச் சென்றுர் என்று நீ எண்ணுவதேன்? நேற்று மாலை உன்னுடன் அன்புடன் அளவளாவிய அவர் அவ்வாறு இன்று மாறுவதும், உன்னை வெறுப்பதும், வெறுத்தலுடன் உன்னை நீத்துச் செல்லவே மறைந்தா ரென்பதும் என்ன கூற்று?"

"சாரதா! மாலையிற் சென்ற தந்தை இவ்வளவு நேரமாகியும் வாராமைக்குக் காரணமென்ன? அவருக் கேதாகிலுந் தீங்கு நேரிட்டதோ!

"சுலோசனு! அன்பு நெறியைப்பற்றிப்பிறர்க்குத் தொண்டாற்றலையே நம்முடைய கடனுகக் கொண்டு பிறர்க்குக் கனவிலுந் தீங்கிழைக்கக் கருதா அவருக்கும் தீங்குநேரிடுமோ? இவ்வாறு வீண் சந்தேகங்களை வளர்த்து நீயே வாடுதல் முறையாமோ?"

"தோழி! ஒருகால் ஓராண்டுகளுக்கு முன்னர்த் தந்தை கடிய மறைந்த அண்ணுவைத் தேடிப்பிடித்தற்கு உற்றதுப் பறிபவரை யமர்த்தவே அவர் சென்றிருப்பரோ? இன்றேல், இன்று திடீரென மறைந்த என் காதலரைத் தேட அவர் சென்றனரோ? அண்ணுவினிடத்தில் அவர் வைத்த அன்பு அவலமாகியது. ஒற்றுமையும் உரிய உரிமையும் ஒன்றே டொன்றியைந்து வதிந்த நம்முடைய வாழ்க்கையும் இப்படி இடிப்புண்டதே! சாரத! இஃது ஆண்டவன் திருவுளம் போலும்!"

"சுலோசனு! இதுகாறும் அண்ணுவின் உறைவிடத்தையறியத் தந்தையால் அமர்த்தப்பட்ட துப்பறிவோர்களாலும் இயலவில்லையே. அவர் சென்ற ஓராண்டாகக் கையில்பணமுமற்றுக் கடனளிப்பாரு மற்று எத்துச்சிற் கிடந்து துயருறுகின்றுரோ? தாம் தூர்த்தருடன் கூடி தீய ஒழுக்கம் பூண்ட மெய்ம்மையைத் தந்தை உணர்ந்துவிட்டாரென்றன்றே அவர் இல்லம் நீத்துச் சென்றுர். அன்று முதல் இன்றளவும் அவர் எவ்வாறு தம்முடைய வாழ்க்கையை நடாத்தி வருகின்றுரோ அறிகிலேம். சுலோசனு! அவர் இது காலை உயிருடன் இருக்கின்றுரோ என எண்ணவும் இட மேற்படுகின்றது."

"சாரதா! அவர் இறந்திருப்பார் என யான் எண்ணவில்லை.

"அன்புறு மறத்திறைலடுக்கு மின்பமே
யன்பெனத் தக்கதா லேனையின்பெலாந்
துன்பமும் பழியுந் தோற்றுமாதலால்
வன்புறு மறத்தினை மறப்பிற் கேடுறும்."

—விநாயக புராணம்.

என்னும் அறவுரைக் கேற்ப, அறநெறி நின்று துய்த்திடும் இன்பத்தைப் பேணுது, தூர்த்தருடன் கூடி, தூய அறம்வாட, சிறந்த சீலம் வதங்க, ஆழ்ந்த அறிவும் மயங்க, புல்லொழுக்கம் பூண்டு நின்றழியும் அற்ப இன்பத்தை நாடியதாலன்றே தந்தை அண்ணுவைக் கடியவும் நேர்ந்தது. இயற்கையன்னைக்கு விரோதமான கொடிய பழக்கங்களைக் கற்றதனுலன்றே அண்ணுவின் அழகிய ஞான ஒளிவீசும் வதனமும் வாடியது; இறைவன் மாட்டு அவர் இளமையிலிருந்து கொண்ட பேரன்புங் குறைந்தது; குலப்பெருமையும் குணப்பெருமையும் அருகி ஒழிந்தன. இம்மெய்ம்மையை யெடுத்தோதற்கன்றே,

"மயக்குங் கள்ளு மன்னுயிர் கோறலுங்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்."

—மணிமேகலை.

என்று சாத்தனுர் தமதருங்காவியத்தில் அற நெறியை அறிவுறுத்திப் போந்தார்."

"ஆம். சுலோசனு! இளமையில் இருந்தே இறைவன் இடத்து இடையறு அன்பு பூண்டு, பிறர்க்கு நல்லுரை யோதி நின்ற அண்ணு இவ்வாறு திடீரெனக் கூடா வொழுக்கத்தான் கள்ளுண்ணவும், வேசியருடன் கூடவும் துணிந்தது நம்முடைய இன்ப வாழ்வையே இடிப்புண்டு வதங்கிடச் செய்தது.

"அறிவை யழிக்குஞ் செயலழிக்கு
மழியா மானத்தனை யழிக்குஞ்
செறியு மறிஞர் மதியாத
செருக்கை விளைக்கு மீன்றுளு
முறியும் வெறுப்பு மிகவிளைக்கு
முனிவு விளைக்கும் பகையஞ்சாக்
குழிகள் விளைக்கு நகைவிளைக்குங்
கொள்ளேல் கள்ளுண் டலைமைந்த."

—விநாயக புராணம்.

என்று அறிஞர் அநுபவ வாயிலாகக் கண்டு முடிவு கட்டி யோதிய இப்பாடலே கள்ளுண்ணலால் விளையுந் தீங்குகளை யோதவில்லையா? அறிவை யழித்துச் செயலை முறித்து, மானத்தை யொழித்து, செருக்கை யளித்து, பெற்றவளுக்கும் வெறுப்பை விளைத்து, வெகுளியை மிகுத்து, பகையை அழைத்து, அனைவரும் எள்ளி நகையாடும் இழிய நிலையை அடைந்திடத் துணைக் காரணமாக அண்ணுவுக்குச் சிறக்க விளங்கியது இப்பாழுங் கள்ளுண்ணலேயன்றே? இக்கொடும் பழக்கத்தைக் கொண்டதுடன்,

"இழிபவ ருயர்ந்தோர் மூத்தோர்
இளையவர் கழியா நோயாற்
கழிபவர் யாவ ரேனுங்
கண்வலைப்பட்டு நெஞ்சம்
அழிபவர் பொருள்கொண் டுள்ளுக்
கென்னெய்போ லளந்து காட்டிப்
பழிபகு போகம் விற்பார்."........

—திருவிளையாடற் புராணம்.

என இழித்துரைக்கப்படும் பொது மகளிரின் உறவையும் அவர் நாடியது என்ன கோலமோ! இறைவனிடத்து இடையறு அன்பு கொண்டு வாழ்க்கையை நாடாத்திய உத்தமராகிய அண்ணு இவ்வாறு திடீரெனக் காமப் பேயராக மாறியது கோள்களின் செயலெனக் கூறினும் ஒவ்வும். கல்லாக் கயவர்களைப் போலும், காதலையுங் காமத்தையும் பகுத்தறியுந்திறன் ஒடுங்கிய குடிநிலையில் அண்ணு மதியிழந்து மயங்கியது உண்மையேயாகும்.

"கொலையஞ்சார்பொய் நாணர்
மானமுமோம்பார்
களவென்றே வேலையவுஞ்
செய்வார்—பழியோடு
பாபமிஃ தென்னுர்
பிறிதுமற் றென்செயார்
காமங் கதுவப்பட்டார்"

—நீதிநெறி விளக்கம்.

என்னும் மெய்யுரையும் பொய்யாமோ? அந்நிலையில் கள்ளுங் காமமும் பீடர்பிடித்துந்த, சகவாசதோஷத்தான் முற்றும் மாறிய அண்ணு, கடன் வாங்கவும் கண்மூடிச் செலவழிக்கவும் துணிந்தமையா லன்றே தந்தையும் அவரைக் கடியலாயினுர். காமக் கிழத்தியருடன் கூடிக் காமப் பேயராக அண்ணு மாறியது பெரும் விந்தையாகவே இருக்கின்றது.

"உள்ளினுஞ் சுட்டிடு முணருங் கேள்வியிற்
கொள்ளினுஞ் சுட்டிடுங் குறுகி மற்றதைத்
தள்ளினுஞ் சுட்டிடுந் தன்மை யீதினுற்
கள்ளினுங் கொடியது காமத் தீயதே"

—கந்தபுராணம்.

என்று காமத்தின் இயல்பை யோர்ந்து அனைவருக்கும் அக்காமத்தால் விளையுந் தீங்குகளை யெடுத்தோதி யறிவுறுத்தித் திரிந்த அண்ணுவே இவ்வாறு காமப் பேயராக மாறியது எனக்குப் பெரும் வியப்பையே யளிக்கிறது."

"சாரத! எண்ணி யெண்ணி யேங்கிப் பயனென்? அண்ணுவின் விதிவசம் அவ்வாறிருந்தது. பிறர்க்கு நல்வழியையும் அன்பு நெறியையும் அறிவுறுத்திய அவரே கண்மூடி அறிவிழந்து துச்சில் விழுந்து அல்லலுறுதல் அவருடைய ஊழ்வினைப் பயனென்றே கூறவேண்டியிருக்கின்றது.

" என்பினை நரம்பிற் பின்னி
உதிரந்தோய்த் திறைச்சிமெத்திப்
புன்புறந் தோலைப் போர்த்து
மயிர்புறம் பொலிய வேய்ந்திட்
டொன்பது வாயிலாக்கி
யூன்பயில் குரம்பை..."

—சீவக சிந்தாமணி

யின் இயல்பையும் நிலையாத்தன்மையையும் இனி தேர்ந்து,

"பண்டம் பொய்க்கூரை பழகி விழுதலால்
உண்டஅப்பெண்டிரும்மக்களும்பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமு மல்லது
மண்டிய வருடன் வழிநடவாதே".

—திருமந்திரம்.

என்னும் முதுவுரைக் கிணங்க உயிரொடுங்குங்கால் உடன் போந்து, இன்பத்தையும் துன்பத்தையும் விளைக்கேற்பப் பெற்றிடும் உடலியல்பை யுணர்ந்து, பிறப் பிறப்பென்னும் கடல் கடந்து, முரிச் செல்வமாகிய பேரின்பத்தில் திளைத் தெழத் துணைக் காரணமாக இருக்கும் அற வழியையும், அன்பு நெறியையும், காதல் மாண்பையும், உயர் தொண்டையும் பேணாது, அறிவிருந்தும் கள்ளுண்ணவுங் காமப் பேயாகவும் மாறிய அண்ணா பித்தாயினரெனக் கூறவே வேண்டியிருக்கின்றது. சாரத! அவரை நாம் மீண்டும் பெறுவோமா? இறைவனுடைய பேருளை அவர் மீண்டும் பெற்றிடுவாரா? அவர் இளமையிலிருந்து பற்றி நின்ற அன்பு நெறியும் இன்ப வாழ்வும் அவருடைய வாழ்க்கையை இனியும் செப்பமிட்டுக் காதலுடனும், உரிமையுடனும் விளங்கிடச் செய்திடுமோ? அவரைப் பிரிந்த வாட்டம் ஓராண்டாக நம்மை வாட்டி நின்றிட, திடீரென என் காதலரும் மறைந்தனரே. சாரத! நான் என் செய்வேன்? எவ்வா றுய்வேன்?"

"சுலோசனா! இறைவனை நம்பினோர் கைவிடப்படார். நீ சிறிதுங் கலங்காதே. தந்தை வருஞ் சமயமுமாகிவிட்டது. நாம் இல்லத்துள் செல்வோம். துயருறுதல் நீத்து இறைவனைப் போற்றில். அவனருளால் அவனடியை வணங்கி நின்றிடுவோரைப் பற்றிய துயரம் சூரியனைக் கண்ட பனி போலும் மறைந்தொழியும். ஆதலால் கவலை யற்றிரு. அதோ தந்தை வருகின்றார். நம்முடைய மோட்டார் வண்டியும் மாளிகையும் நுழைவதுகாண். உன்னுடைய காதலரின் செய்தி யாதேனும் அவர் கொண்டு வந்திருந்தாலும் இருந்தலாகும். வா! விரைந்து மாளிகையுள் செல்வோம்."

சாரத!

" என் செயலா லாவதுயா
தொன்று மில்லை இனித்தெய்வமே
உன் செயலே வென்று
ணரப் பெற்றேன்..."

—பட்டினத்தடிகள்.

எவ்வினை வாட்டும் இவ்வாட்டத்தை இறைவன் சந்நிதியில் ஓட்டிடுவது திண்ணம். வா போகலாம்."

சிவனடியார் சிறப்பு

[திரு. சி. சதாசிவனர்]

சிவன் மாட்டு, என்றும் மாறா அன்போடு ஒழுகி, அவனது தூய இயற்கை நெறியில் நின்று, அவன் கட்டளையை ஆற்றி முடிப்பதே தமது வாழ்வின் முக்கிய நோக்கமாகக் கொண்டு உழைப்பவரே சிவனடியார் எனப்படுவர். அவர் தமக்கென வாழாது உலகிற்கு நற்றொண்டு ஆற்றுவதற்கே வாழும் பெற்றியாளர். மக்களுக்கு எஞ்ஞான்றும் கெடாத நன்மை பயப்பது சிவஞானம். ஆதல் பற்றி இவ்வறிவை அவர்க்கு ஊட்டுவதே யாவற்றினும் சாலச் சிறந்ததொரு நன்மையெனக் கொள்ளப் படுகின்றது. சிவானுபூதிமான்களே அவ்வறிவூட்டும் திறன் மிக்காராதலான், அவர்களே மெய்ச்சிவனடியாராவர். இவ்வறிவு சிறக்குமிடம் இப்புவனமே என்பது தெளிந்தோர் முடிபு. நன்மை தீமை எனும் அனுபவ வாயிலாக, உள்பொருளைத் தேர்ந்து தெளிதற்கே, மனிதர் இவ்வுலகிற் போக்குவரவு புரியா நிற்கின்றனர். இந்த இருவித அனுபவங்களான், ஆன்மா, அரனை அறியும் ஆற்றல் அடையட்டும் என்று ஆண்டவன் அருள் அலர்ந்ததே மக்களது உடலம் ஆகும். மெய்வழி நின்றே அறிவு சிறத்தலால், சரீரங்களும் சிறந்தன ஆகும். ஆக உடல் நலத்திற்காகவேனும், பிறர்க்கு உண்டி உதவுவோர், பிணி களைபவர், கல்வி புகட்டுவோர், அன்ன பிறரும் அறிவு சிறத்தற்கு உதவும் முறைமையான் ஒவ்வொரு துறையில் தொண்டாற்றும் அடியார்கள் ஆவர்.

ஒருமனிதனைத் தெள்ளாரமுதாறும் தூய சிவநெறிப்படுத்துவதற்கோ, நிலையற்ற உலக இன்பத்துறை இறக்குதற்கோ காரணமாயுள்ளது அவனது சித்தமே என்பது தெளிந்த தொன்று. உள்ளத்திற்கு உணவூட்டுவது மனமாகும். மனம் புலன் வழி புறம் புறந்திரிந்து, இன்ப துன்பங்களை நுகர்ந்து, அவ்வனுபவங்களை அகத்தே அனுப்ப, சித்தமானது அவற்றைப் பதநம் செய்து கொள்கின்றது. இச்சன்மத்தில் மட்டுமல்ல, சென்ற பிறப்புகளில் அறிந்த அனுபவங்களின் தொகுதியாக நின்று, அவ்வாறு பயின்ற துறைகளில் மனதைச் செல்லும்படி சித்தம் தூண்டா நிற்கின்றது. மனம் எதைப்பற்றி நிற்கிறதோ அதைச் சித்தம் பதிவு செய்து கொள்கின்றது. காலம் வாய்க்குங்கால் அது மனதின்வழி மனிதனை அத் துறைகளில் இறக்குகின்றது. உலக இன்பிலேயே நாட்ட முடையவன் தவறி அதை மறந்தாலும், சித்தம் ஞாபக மூட்டிவிடும். எண்ணிறந்த பிறவிகள் பிறந்திளைத்து, உலகில் உழன்று உழன்று, பின் மனிதனது மனம் இவ்வுலகவின்பம் நிலையற்ற கானல்நீர் எனத்தேர்ந்து தெளியுங்கால் அவனருளால் அவன் நினைவு உதித்து அவனை வழுத்தி அவன்நெறியைப் பற்றலே உண்மை இன்பந்தரும் நற்கருமமென்று மனிதன் தெளிகின்றான்.

உண்மை ஓர்ந்து, சிவ நெறியைச் சார்ந்து மனிதன் செயலாற்ற ஆரம்பிக்குங்கால் அவனது உள்ளம் தெளிந்து, மாறுத லடைகின்றது. உண்மையில் துன்பம் என ஒன்று இங்கு இல்லவே இல்லை என்றும், கட்டுடை அறிவிற்குத் துன்பமெனத் தோன்றுவது, அவனை நல்வழித் திருப்பவந்த ஓர் அனுபவம் என்றும் ஓர்கின்றான். துன்பம் உள்ள பொருளாயிருந்தால், அதினின்றும் ஒருகாலும் நன்மை தோன்றாது; துன்பம் எக்காலும் துன்பமாகவே இருக்கும். துன்பம் எப்போதும் நிலை நிற்பதை நாம் காண்கிலோம். ஆக, துன்பம் இல்பொருள்எனும் உண்மைஓர்ந்து தீமை எனத்தோன்றும் அவ்வனுபவத்தினின்றும் அஃது ஊட்டும் பாடத்தை உணர்ந்தவுடன் மனிதனுக்குப் பின் அவ்வனுபவம் இன்றாகும். ஓர் எடுத்

ஆக் காட்டினால் இதை விளக்கலாம். நன்கு செப்ப னிடப்பட்ட வழியை நீத்து ஒருவன் நடக்கிறான். கால்களில் முட்கள் தைக்கின்றன. அவ்வனுபவத்தால் அவன், தான் தவறி நடப்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். அப்படிக் கொண்டு பாதைக்குத் திரும்பியதும் அவன் அவ்வித அனுபவத்தை விட்டு நீங்குகிறான். ஒவ்வொரு சமயத்தையும் இவ்விதம் அறிவுச் சுடரில் சோதித்து உண்மை காண்டல் அறிவுடைமை. இத்தகைய மனப்பாங் குடையவன் செப்பனிட்ட சிவனது மார்க்கத்தில் தானுகவே நடக்க ஆரம்பிக்கிறான். தனது நன்மைக்காகவே யாவற்றையும் ஆக்கி வைத்த ஆதிக்கடவுளது அருட்டிறத்தை நினைத்து நினைத்து, உருகிஉருகி, ஒழுக ஒழுக அவன் தூவெளிமனது, புறநினைவு அருகி அருகி, அறிவு விளக்க முறுகின்றது. இவ்வறிவே சிவம் எனவும் அவன் அறிகின்றான்; உலக போகங்கள் நீர் மேற் குமிழி எனத்தள்ளி, என்றும் நிலை நிற்கும் பேரின்ப வாழ்வை நண்ணித் தன்னுடல் பொருள் யாவற்றையும் அவ்வறிவுச் சிவனுக்கே யாக்கி அவன் வழி நின்று அவனது கட்டளைப்படி நடக்கும் அவனது அடிமையாகின்றான்.

தெள்ளத் தெளிந்த மனத்தராய், நன்னெறிப் பட்டனராய்த் துலங்கிய பெரியார்கள் பலர் எப்போதும் இவ்வுலகில் இருந்திருக்கின்றனர். சமய ஒழுக்கம் நலிவுற்ற நாட்களில் அவர்கள் நனி தோன்றி, உண்மை யறிவைத் தங்களது செயல்களாலும், மொழிகளாலும் பல அதிசயங்கள் நிகழ்த்தலாலும் உலகில் நிலை நாட்டி யிருக்கிறார்கள். அவர்களில் ஒருவரது சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் அவர்களுடைய மனப்பாங்கும் ஏற்றமும் விளங்கும்.

தாண்டகம் பாடுவதில் இணையற்ற நாவுக்கரசுப் பெரியாரை எடுத்துக் கொள்வோம். சமணந்தலைப்பட்டு சைவப்பற்றுக் குறைவுற்ற காலத்து அவர் தோன்றினார். அவர் சைவத்திற்பிறந்து, சைவத்தில் வளர்ந்து, சைவ நூல்களைக் கறை கண்டார். கண்டும் அவர் மனந் தெளியவில்லை. பிற மதங்களுண்மையை ஆராய ஆவலாகி அவர்சமண நூல்வல்லுநர் ஆனார்; அதில் பற்றுதலாகி, அதைச் சார்ந்து ஒரு பெரிய குருவாய் விளங்கினார். இவரது வேலை சைவத்திலிருக்கவே, ஆண்டவன் இவரை ஆட்கொள்ள அருள் சுரந்தானாக, இவருக்கு நோயொன்று உண்டாயிற்று. அந்நோய்க்கு அமைந்த மருந்து சமணர் வசம் அகப்படவில்லை. பின் சிவனே பெருமருந்து என்னும் அறிவு உதித்து அந்நெறிச் சார்ந்து, அவனைவழிபடலும், அந்நோய் நீங்கிற்று. தீய அனுபவம் மனிதனை நல்வழிப்படுத்துவதற்கு இஃது ஒரு நற்சான்றாகும். அதுமுதல் அவர் ஈசனது கருணைத் திறத்தையும், அண்டினோரை அவன் ஆதரிக்கும் ஆற்றலையும் பற்றிப் பாக்கள் பாடித் துதி செய்ய ஆரம்பித்து அவனது தொண்டில் ஈடுபட்டார். இதைச் செவியுற்ற சமணர் கோன் அவரைப் பிடித்து வரும்படி ஆட்களை ஏவினான். ஒற்றர்கள் வந்து அழைத்தபோது நாவரையர் எம்மாற்றம் கூறுகின்றார்?

"நாம் யார்? எமை அழைத்த அரசன் யாவன்? அவன் மாட்டு எமை இட்டுச் செலவந்த நீவிர் யாவர்? நிலம் புரக்கும் ஒரு காவலனுக்கும் நாம் படிவோம் கொல்? நாம் அவனது பணியாளர் கொல்? அவனது காவல், கட்டுள்ளவற்கே உண்டு. நாம் கட்டற்றோம்; அவனது காவலும் அற்றோம்; நாமார்க்கும் குடியல்லோம்; அவ்விடம் நாம் வாரோம்.

மண்ணுளும் அரசர்க்கும் அரசனை விண்ணுளும் சிவன் குடியாவோம். வேறு யார்க்கும் குடியல்லோம். எங்கள் கோமான் எத்தன்மையன்? தாமார்க்கும் குடியல்லாத் தன்மையன்; நான் எனும் நசை நண்ணிய நலமிலார் நெஞ்சத்தில் மட்டுப்படாது, கட்டின்றி, எட்டுத் திசைகளிலும் நீக்கமற நிறைந்து நின்று, நம்மை ஆட்டிவைக்கும் நுண்ணறிவாய், இயற்கை வழி நட்டம் பயிலும் நமது நக்கன் ஆர்க்கும் அடங்காத அரும்பொருள்; அங்கு இங்கு என்னாதபடி எங்கும்நிறைந்த, கட்டற்ற ஒரு செம்பொருள்; அண்டினோரை ஆதரித்து அருவினை அகற்றும் பரம்பொருள்; அச்சங்கரனது தொண்டர் யாம். அவனறிவு பெருகி, "நாம்" குறுகி-அருகி - அவனது இணையடி நாம்குறுகி-மருவி - என்றும் மீளா அடிமைகள் ஆகியநாம் எங்ஙனம் உமது அரசனது ஆணைக்கு அடங்கி அவன் அழைக்க அவ்விடம்வர இயலும்? நமக்கு ஆண்டவன் ஒருவனே.

நாம் எக்குற்றம் செய்தோம்? கவர்ந்தோமா? வஞ்சனை ஏதும் புரிந்தோமா? கடலை - குற்றம் - யாதும் இல்லோம். நெஞ்சில் வஞ்சனை மிஞ்சிய மாந்தரல்லவோ அஞ்சி அரையனைக் கெஞ்சித் தஞ்சம் அடையவேண்டும்? நாம் அவனை அஞ்சுதல் எற்றுக்கு? அவனிடம் நமக்கு யாதும் வேலை இல்லை.

முற்செய்தவினையினைச் சங்கரன்எரித்தான். இப்பொழுது எம்மிடம் வஞ்சம் கொஞ்சமும் இல்லை; குற்றம் இல்லை; தீயன செயலும் அற்றோம்; துகள் அற்றோம்; தீயன ஆற்றலால் வரும் தீதும் அற்றோம்; ஆண்டான் அடிமை ஆகிய நாம் அவன் அருள்வழி அமைந்து அவன் சொற்படி செயலாற்றி வருகின்றோம். ஆதலான் கூடாதன செய்ய ஆற்ற இயலோம்; இடரற்றோம்; நரக மெனும் நிலை அற்றோம்.

துகள் அற்றோம்; முன்தோன்றிய பிணியும் அற்றது; ஒளி தோன்ற இருள் கெட்டது; சுகந்தோன்றிப் பிணிகளைந்தது; நரம்புகளின் உணர்ச்சியாக, குருதியின் வளர்ச்சியாக, உடம்பின் சுகமாக, ஏகமாக எங்கும் விரவிய சிவனார் நெஞ்சில் உற்றார்; பிணியார் அற்றார்; பிணியறியோம்.

வினையற்றோம்; வினையால்வரும் உடலற்றோம்; அறிவுற்றோம்; என்றும் உள்ள பொருளுடன் ஒன்று பட்டு, காலக்கட் டற்றோம்; இனி, பிறப்பெய்தோம்; சாவில்லை; நமனை யஞ்சோம்.

வஞ்ச நெஞ்சத்தால் வரும் பிணித் துன்பம், இறந்தத் துன்பம் ஆதிய யாவும் இடக்கட்டு காலவரை யற்று விரிந்த எமக்கு இல்லை; எந்நாளும் எமக்கு இன்பமே.

ஒரு தளையும் இல்லாதொழிந்த நாம் கட்டற்ற ஒரு சிற்றரசனது மாற்றம் செவியுற்று அவன்மாட்டு வருவோ மல்லோம்; அவனைப் பணிவோ மல்லோம்; அவ்விடம் வாரோம்."

"நாமார்க்குங் குடியல்லோம்
நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம்
நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம்
பணிவோ மல்லோம்
இன்பமே என்னாளும்
துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத்
தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண்
குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும்
மீளாவாளாய்க் கொய்ம்
மலர்ச்சே வடியிணையே
குறுகி னோமே."

தமை மறித்துச் செலவந்த மாறலர் மனிதற்கு மறுமாற்ற மளிக்கும் இத் திருத்தாண்டகம் ஒன்றில் எத்துணை வீரச்சுவை, பொருட்சுவை, உண்மைச் சுவை பொங்கி வழிகின்றது? எவ்வளவு மகத்தான உண்மையை அழகாக அமைத்து அடியார் அவனிக்கு அளித்துள்ளார்? மதங்கள் யாவும் உலகந் தோன்றியது முதல் வாதிட்டு வாதிட்டு முயன்றும் கண்டுகொள்ள முடியாத ஓர் உண்மை இவ்வொரு பாவில் அடங்கிக் கிடக்கின்றது என்று கூறினும் பொருந்தும். "சொற்கோ" என வழங்கும் பெயரும் அவருக்குப் பொருத்தமுடையதாகும் என்று எண்டுக்கூறுவது மிகையாகாது.

ஆண்டவன் எங்கும் நிறைந்தவன். அவனை யறிய வேண்டில் வஞ்சம் நீக்குதல் அவசியம். அடிமை ஆகி அவனிடம் எல்லாவற்றையும் ஒப்புவித்து அவன்

வழி நின்று ஒன்றுதல், ஒன்று பட்டதும் துன்பம் ஓடல், இன்பம் நிலைத்தல், பிறவியறுதல், அவன் குணங்களும் ஆன்மாயமையப்பெறல் ஆகியனைகள் இப்பாவில் அடங்கியிருக்கின்றன.

முன்னாட்களில் ஒரு சமயத்திலிருந்து மற்றொரு மதத்தைத் தழுவும்படி மனிதர்களை அரசன் துன்புறுத்துவது வழக்கமாயிருக்க, முக்கிய அறிஞராயிருந்த அடிகளை அரசன் எவ்விதத் துன்பமும் ஆற்ற விழைவான் என்பது சொல்லாமலே விளங்கும். அதற்காகவே ஒற்றர் வந்திருந்தனர். அடிகள் "நாம் அவனது குடியல்லோம்" என்று ஒரு விடையிறுத்தார். இவ்வளவு மனோ பலம், தைரியம் எங்கிருந்து வந்தது?

அடிகள் நன்மைக்கு இருப்பிடமாயுள்ள ஊற்றுக் கண்ணைக் கண்டு பிடித்து விட்டார். திறவு கோலைப் போட்ட உடன் ஊற்றிலிருந்த ஜலம் மடமட என்று கிளம்புவதைப்போல் அவருக்கு நன்மை பொங்கியது. ஆண்டவனிடத்து நீங்காத நம்பிக்கையும் தியானமுந்தான் இத்திறவு என்று சுருங்கச் சொல்லி விடலாகும். அவனது எங்கும் நிறைந்த தன்மை, அளவிடற்கரிய அறிவு, குறைவுபடாத அன்பு இன்பு, இவற்றை இடையறாது எண்ணி எண்ணி ஒருவன் தியானத்தில் ஆழ்வானாயின், காலக் கிரமத்தில் அவனது அறிவு கட்டுவிட்டு, ஆண்டவனோடு ஒன்று படுவான். தியான பலத்தினால் மட்டும் மனிதன் மேலோங்கி உயரிய நிலை அடையலாம் என்பது உண்மையாகும்.

இத்தியானத்திற்கு இடையூறாக நிற்பது மாசு. அதற்குக் காரணம் ஆசை. உலகில் காசாசையினால் மனிதன் எவ்விதச் செயலையும் செய்ய முற்படுவது கண்கூடு. காசைச் சாமி எனப் பூசை செய்வது இன்னொரு கடவுளை வணங்குவதாகும். இவ்வித மாசு அகன்றால் தான் தியானம் கைகூடும்.

மாசும் பாசமும் அற்றகாலை உண்மையைப்பற்றிய தியானத்தால் மனது வெளுத்து, ஜோதி அரசனது அகண்ட ஆகாரம் தோன்றுகிறது. மனிதனது உள்ளம் திடுக்கிட்டு உருகி அவ்வகண்டத்தில் ஒன்றி இணைபிரியாது கலந்து சித்தம் போக்கு சிவன் போக்காக ஆகி விடுகிறது. 'நாமார்க்குங் குடியல்லாத் தன்மை'யான சங்கரனோடு ஒன்றியதும், 'நாமார்க்குங் குடியல்லாத் தன்மை' உண்டாகி விடுவதை நாம் உன்ன வேண்டும்.

இப்படி ஒன்றியதும் இடவரம்பு, காலவரம் பற்று ஒரு மலைபோல் மனிதன் ஆகிறான். மேகங்கள் குமுறிக் கொட்டட்டும்; பெரும்பெரும் புயல்கள் உழலட்டும்; பெருஞ் சண்டைகள் நிகழட்டும்; வான்முகடு தோய்ந்த மலைச் சிகரத்திற்கு இத் துன்பங்கள் எம்மாத்திரம்?

ஒற்றர் அழைத்த போது இவர் தியானத்தில் அமர்ந்தார் என்று கூறுதல் பொருந்தும். அப்போது அவர்உள்ளத்தில் எழுந்த எண்ணங்கள் பாக்களாக வெளிப்போந்தன வென்றுகூறுவோம். அவையே ஒற்றர்க்கு விடையாயின. அவையே மறையாக இப்போது நமக்கு நிற்கின்றன.

நம்பிக்கையால் உண்டாவது தியானம். தியானத்தினால் உண்டாவது ஒன்றுதல். பின், ஓடுவது தீமை; வருவது இன்பு. இவைகளுக்கு அடிப்படையாக உள்ளது துகளறல்; சித்தந்தெளிதல். மற்றொரு பெரியார் சொல்லுவதை ஈண்டுக் கவனித்தல் அவசியம்.

"சித்தந் தெளிவீர்காள்
அத்த னாரூரைப்
பத்தி மலர்தூவ
முத்தி யாகுமே"

அறிவு தெளிந்து, உண்மை யறிந்து, ஒரு நவசக்தி யடைந்து, உலகைவென்ற பெரியார் சிறப்பை எடுத்துப் புகல்வது நம்மா லியலுமோ?

புதிய கல்வியும் புராதின ஆசிரமங்களும்

பேறிஞர் வாசுவானி அவர்கள் பொறிந்த ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம்

[திரு. கி. சுப்பிரமணியனார்]

மேனாட்டில் பூத்துள்ள புதிய கல்வி இயக்கமானது இளைஞர்க்குச் சீரிய பயன் தரும் என்பது ஒருதலை. பகுத்தறிவும் விவேகமும் தம்முட்சில உட்பொருளை உடையன. அவற்றின் பேதாபேதங்களை ஒப்புநோக்கி விரித்து முறைப்படி கூறப் புகுந்தால் அவை நம் நேரத்தைக் கொள்ளை கொள்ளும்.

"விழுமிய கருத்துக்கள் உள்ளத்தினின்றும் உதிக்கின்றன. மனத்தினின்றும் ஆராய்ச்சி எழுகின்றது; கூர்த்தமதி அதை விளக்குகின்றது."

—வாவனர்க்யூஸ்.

இற்றைநாள் மேனாட்டுப் பெரியோர் குழந்தைகட்கு உடல், மனோவுணர்ச்சி, இயற்கையாகிய இம்மூன்றின் வாயிலான் கல்வி போதிக்கப் படல்வேண்டுமென்பதை ஒப்புக்கொள்ளுகின்றனர். உடல் மூலமாய்க் கல்வி போதிக்கப் படல்வேண்டுமென்பது, உடல் நலமும் தேகபலமும் புலனடக்கமும் வேண்டுமென்பதைக் குறிக்கின்றது. மனோவுணர்ச்சியை இன்னிசைக் கருவிகளும் அழகிய சித்திரங்களும் கவருகின்றன. தற்போது மேனாட்டில் கிளைத்துள்ள இப்புதிய முறை, பண்டை இந்தியாவில் நம்முன்னோர்கள் கையாண்ட சீரிய முறையல்லவோ?

புராதீன ஆசிரமங்கள் இயற்கையழகு செறிந்து, இயற்கை மணங் கமழ்ந்து, கண்ணைக் கவரும் இனிய காட்சி நல்கவல்ல இடங்களி லல்லவோ நிறுவப்பட்டன? ஆனால், தற்போது நம் நாட்டிடைப் பரவியுள்ள கல்வியானது, பெரும்பொருளா லாக்கப்பட்டு வானையளாவிய கல்விச் சாலைகளையே அளாவுகின்றது. பண்டைக் கல்வியோ, இன்பம் நிறைந்து, இயற்கை மணங் கமழும் கூட்டுறவையும், ஞானாசிரியனையும் தன்னகமுடைத்தாய் 'மக்கட்கு இயற்கையான எளிய ஆரோக்கிய வாழ்வையும் உடலுரத்தையும் பயந்தது.

முற்காலத்தில், கல்வி ஆன்ம வளர்ச்சிக்கும் சுயநலமற்ற தொண்டாற்றவும் பெரியோர்களால் மாணவர்க்கு ஊட்டப்பட்டது. அதனையே சீரிய அறமாக யாவரும் போற்றினர். தற்போது இரண்டும் நம்நாட்டில் இல்லை. இயற்கையழகைப் பொறித்த ஓவியங்கள் ஒவ்வொன்றும் ஒரு நல்லாசிரியனாகும். நம் நாட்டிடைக் கல்விச் சாலைகளில் இத்தகைய ஓவியங்கள் வைத்து அழகு பெற நிறுவப்பட்ட 'வீரர் நிலையங்கள்' யாண்டும் பொலிதல்வேண்டும். அவற்றின்கண் ஐம்புலனடக்கிய மாதவரும், போர் முனையஞ்சா வீரரும் பொறிக்கப் பட்டுள்ள உருவப்படங்கள் திகழ்தல் வேண்டும். இத்தகைய ஓவியங்களே குழந்தைகளின் மாசற்ற மனதைக் கவருந்தன்மைய.

பண்டைப் பாரதநாடு ஊட்டிய கல்வியானது வெறும் புத்தகப் படிப்பன்று. அது பொதுமக்களின் வளர்ச்சிக்கும், வாழ்விற்கும் அடிகோலிற்று. இதயத்தையும் தலையையும் போன்று கையானது அவ்வளவு புனிதமான உறுப்பல்லவோ? செய்ய கையாலாக்கப் பட்ட பணியின் சிறப்பியல்பை நாடு நன்கு உணரவேண்டும். நம்தாய் நாட்டுப் பள்ளிகளில், குடிசைத் தொழில்களும், கைப்பணிகளும், ஓவியம் வரைதல், இன்னிசைக் கருவி செய்தல், நாடகக் கலை பயில்தல், போன்ற நற்பணிகளும் பல ஆக்கம் பெற அமைத்தல் வேண்டுமென்பது எனது வேணவா. மாணவர் உடல் நலன்பேணும் முறையிலும் கருத் தூன்றுவார்களாக. அதுவே மாணவர்க்கு ஆக்கந் தருவது. ஆனால், தற்போது மாணவர் கையாளும்

விளையாடல்கள் உடலுக்குப் போதிய நலந் செய்யா. தேக வலிமையைத் தரும் பயிற்சிகளையே மாணாக்கர் கைக் கொள்ளல்வேண்டும். வெறும் புத்தகப் படிப்பு மாணவர்க்கு அடிக்கடி தலைவலியைத் தருகின்றது. உடற் பயிற்சி அவர்க்குப் புத்தகங்களைவிட அதிக உதவி புரியும். அதனால் அவர் ஆரோக்கியமாய் வாழலாம். இது பற்றி ஒரு மருத்துவப் பேரறிஞர், "நல்லுடல் பெறுவதே ஒருவன் எய்தும் பிறப்புரிமை" எனப் புகன்ற பொன்மொழியை நோக்குக. இவ்வியற்கை உரிமையை மாணாக்கர் மறந்து வகுப்புத் தேர்ச்சிக்காகத் தம் உடல் நலத்தைத் தத்தஞ் செய்கின்றனர். இக்கல்வி முறை மாணாக்கர் உடலை அரித்து அவரை வெறும் எலும்புக் கூடுகளாக்குகின்றது. உடற்பயிற்சியும் விளையாட்டும் அவர்க்கிடையே சமுதாய ஒற்றுமையை வளர்க்கின்றன. செல்வத்துள் திளைக்கும் சிறுவரும் தமது போலி நிலைமையை மறந்து வறிய இளைஞருடன் கூடிக் களிக்கின்றனர். விளையாட்டுகள் ஒருவனுக்குத் தன்னை யறியும் தன்மையைப் போதிக்கின்றன.

பண்டை ஆசிரமங்கள், கல்வி சேவை என்னும் இருகண்களையும் தம் மகத்தே கொண்டு இலங்கின. ஒவ்வொரு கல்விச் சாலையும் பணியின் உரத்தை நன்கு உணரவேண்டும். கல்விகற்பதின் நோக்கம், வெறும் அறிவு பெறுவதிலும், மதிநுட்ப மடைவதிலும், தன்னாக்கத்திற்கே உழைப்பதிலுமா யிருத்தலாகாது. படிப்பின் உட்பொருள் பல்லாண்டுகளுக்கு முன்னரே பேரறிஞர் அரிஸ்டாட்டில் குறித்தபடி "சேவையேயாகும்." அரேபியாவில் இலங்கிய நபிகள் நாயகம், "இன்பவுலகம் நின் தாயின் திருவடிகளிலேயே உளது" என்னும் மணிவாசகத்தை மன்பதைகளுக்குச் செவிபுகுத்திப் போயினர்.

'சுயராஜ்யம்' என்னும் செல்வம் இளஞாயிறுகளாம் மதலைகளிடத்திலேயே உளது. அதைப்பெற அவர்க்குச் சக்தியை ஊட்டுதல் வேண்டும். அவர்களை, அருளும், ஆண்மையும், தியாகமும் செறிந்த வீரமக்களாய்த் தந்நலங்கருதாத் தொண்டர்களாய்த் திகழுமாறு பழக்கல் வேண்டும். மேற்கூறியவாறு அவர்கள் பயிற்சி பெறுவரேல் இற்றைச் சிறியராம் அவர்கள் நாளை மாபெரும் பணியாளர் ஆவர்.

"ஆநிரை பின் சென்ற அச்சுதன்"

[ஆரியூர் - திரு. வ. பதுமநாப பிள்ளை]

ஆருயிர்கட்கெல்லாம் ஆனந்த மூட்டும் மனோகரமான வசந்தகாலம்! செஞ்சுடர்க் கதிரோன் கீழ்த்திசையில் எழுவதன் முன்னர், தனது கிரணங்களை மெல்ல மெல்லப் பரப்பிக் குணதிசையை வெண்மை பெறச்செய்தான். பலவகைப் பறவைகளும் இரைதேடும் நோக்குடன் பறந்து திரிந்து கொண்டிருந்தன. 'அயர்வை உதறித்தள்ளி அவரவர்க்குரிய வேலைகளில் உற்சாகத்துடன் தலைப்படுங்கள்' என்றுணர்த்துவதுபோல, கோழிகள் 'கொக்கரகோ' என்று கூவலாயின. மன மகிழ்ச்சி இருப்பின், வினையிலும் மகிழ்ச்சி காணலாம் என்பதைக் குறிப்பது போல, குயில்கள் 'குயில், குயில்' என்று கூவலாயின. ஆலயங்கள் தோறும் காலைப் பூசனையை முன்னிட்டு, மணிகள் 'கண கண' என ஒலித்தன; சங்கினங்கள் 'பொம் பொம்' என முழங்கின. இரவு முழுவதும் தொழுவில் அடைபட்டுக் கிடந்த ஆயர்நிரை, 'எப்பொழுது தங்களது சிந்தைக்கினிய செல்வனோடு வனங்களை அடைந்து இன்புறுவோம்' என்னும் பேரார்வத்துடன் கூடிய ஆயர்பாடிப் பசுக்கள் 'அம்மா!'' அம்மா!' என்று கத்தி நின்றன.

எப்பொழுதும் தங்களை இன்பக் கடலுள் ஆழ்த்தும் தங்களது தலைவனும் தோழனுமான கண்ணனைக் கண்ட வளவில், சீர்த்த காம்புகள் பற்றி வாங்கக் குடம் நிறைக்கும் 'நந்தினி' 'கபிலை' 'சுரபி' என்னும் வள்ளற் பெரும் பசுக்கள் மூன்றும் தம்மடியின் கீழ்க் கலங்களைப் பிடித்த வளவில், கனைத்துக் களித்துக் காம்புகளின் வழியே இனிய பாலைப் பெருகவிட்டன. அக்காம்புகளில் கண்ணன் திருக்கைகள் பட்ட வளவில், அப்பசுக்கள் அடைந்த ஆனந்தம், வானுலகத்துக் காமதேனுவுக்கும் வாய்த்தற்கரிய ஆனந்தமாகும். அப்பெருமான் பால் கறந்த அவ்வற்புதக் காட்சி, பிற்காலத்தில் அவன் நல்லறிவாளர் எல்லோரும் நுகர்ந்து அளப்பரிய ஆனந்தம் அடையும் வண்ணம் உபநிடதங்களாகிய பசுக்களின் மடியிலிருந்து 'கீதாமிருத'மாகிய பாலைக் கறந்தருளப் போவதைக் குறிப்பது போன்று விளங்கியது. கலங்களை வீட்டிற்கு எடுத்துக் கொண்டு செல்லுமாறு தனது தோழர்களுக்குக் கட்டளையிட்ட கண்ணன், அப்பசுக்களின் முகத்தில் அன்போடு முத்தங்கள் பல தந்து முதுகில் தட்டிக் கொடுத்து விட்டுத் தனது சிந்தைக்கினிய மித்திரவிந்தையின் வீட்டுக்குச் சென்றான்.

தங்களது எண்ணங்கள் அனைத்தும் கண்ணனிடத்தில் செல்ல — தாங்கள் விரும்புமளவு தங்களை விரும்பாதவன் போல் காணப்படும் அம்முகில் வண்ணனை வெறுக்கவுங் கூடாமல் - தங்களது ஆர்வம் தீர இன்பம் தருவன் என்று மகிழவுங் கூடாமல் - அல்லும் பகலும் அவனது திருவருளைப் பெறுவதிலேயே ஆர்வம் மிகுந்தவர்களாய் அகம் கரைந்து உருகி நிற்கும் ஆயர் பெண்களிடையில், கோவலர் கொழுந்தாம் கோவிந்தன் சென்று நின்றான். பல வழிகளிலும் தன் உள்ளத்தைப் புண்படுத்தும் காதலனிடம் ஊடல் கொண்ட மித்திரவிந்தை, அவனது ஒப்பற்ற வடிவழகைக் கண்டு விட்டால் தனது பிணக்குகள் அனைத்தும் மறைந்துவிடும் என்று எண்ணியவளாய் - தனது இணைவிழிகளாகிய கணைகளை ஏவின், அவை அவனது மார்பழகில் மயங்கித் தம் வலி இழந்து அவனுக்கு அடிமைப்பட்டு விடும் என்று உன்னியவளாய், நிலத்தைக் குனிந்துநோக்கியவாறே நின்றாள். அப்பொழுது, மெய்யன்பர்கட்குப் பேரின்பம் ஊட்டும் கண்ணனின் கழலழகு அவளது கருத்தைக் கவர்ந்து விடவும்; அவ்வழகோடு காதலிகளைக் கட்டித் தழுவிக் களிப்பெருங் கடலுள் ஆழ்த்தும் அவனது திருக்கைகளின் அழகை ஒப்பிட்டு நோக்க ஆர்வம் மிகுந்தவளாய் நிமிர்ந்து நோக்கினள். அவ்வளவே! அப்பெருமானது இந்திர நீலம் ஒத்த இருண்ட குழலும், சந்திர வதனமும், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் தந்திரம் வல்ல இணைவிழிக்கணைகளும், சிந்தையை மயக்கும் செங்கனி வாயும், சுந்தர மணிவரைத் தோள்களும், எப்பொழுதும் அவனது எழிற் கழுத்தைத் தழுவி நிற்கும் இன்பத்தைப் பெற்ற மணி மாலைகளும், என்றும் அவனது மார்பகத்தைத் தனக்கு உரிய இடமாகக்கொண்ட கௌத்துவம் என்னும் மணியின் பேரொளியும், வனத்தில் அவன் மனத்தில் பெரு மகிழ்ச்சி பெருகுந்தோறும் அவனது செங்கனிவாயின் இன்சுவையை நன்கு அனுபவிக்கும் தனிப் பெரும்பேறு பெற்றுத் திருக்கரத்தில் திகழும் குழலும், கொண்டல் வண்ணமும், குளிர்ந்த நோக்கமும் மித்திரவிந்தையின் உள்ளத்தினின்றும் ஊடலை வெருட்டி ஓட்டிவிடவே, அவள் தன்னையும் மறந்து தனது ஆருயிர்க் காதலனாகிய ஆர்வலனை இறுகத் தழுவிக் கொண்டு விட்டாள்.

அவ்விடத்தில் கூடியிருந்த ஏனைய ஆயர் பெண்கள், மித்திரவிந்தை கொண்டிருந்த ஊடல் இருந்தவிடம் தெரியாமல் மிக்க விரைவில் மறைந்து விட்ட

தைக் கண்டு பெரிதும் வியந்து நின்றனர். தங்களது ஆலோசனைகள் யாவும் கண்ணனிடத்தில் பயன்படாதொழிந்து விடும் என்பதாக உணர்ந்து கொண்ட ஆய்ப்பெண்மணிகள், பெரிதும் வாட்டமடைந்து நிற்கிறார்கள். அவர்களுள் ஒரு நங்கை, கண்ணனை நோக்கிப் பின்வருமாறு பேசலானாள்:—

“எமது சிந்தையில் குடிகொண்ட செல்வரே! விண்மீன்களிடையில் விளங்கும் வெண் திங்கள் போலும் விளங்குபவரே! எம்மவர் எல்லோரையும் இன்புறுத்திவரும் தனிச்சுடர் மணியே! உமது வஞ்சகச் செயல்களையும் பெண்களை வருத்தும் உணராத பெற்றியையும் பன்முறைகளில் கண்டறிந்திருந்தும், எங்களது நெஞ்சம் என்றும் உம்மையே தஞ்சமாக அடைந்து விட்டது. எம்மிடம் உண்மை யன்பில்லாத உம்மிடம், மீண்டும் மீண்டும் வெட்கம் இழந்து தன் மதிப்பைத் தவிர்ந்து சென்று விடுகின்ற எமது பேதை நெஞ்சை, அவ்வாறு செல்வதினின்றும் தடுத்து எங்களிடமே நிறுத்திக்கொண்டு விட எவ்வளவோ முயன்று பார்த்தும், இன்னமும் அம் முயற்சியில் நாங்கள் வெற்றி பெற்றோ மில்லை. ‘தன்னை நினையாதவரைத் தான் நினைந்து உருகுவது பெரும் பேதைமையாகும்’ என்பதைப் பன்முறைகளிலும் எமது நெஞ்சுக்கு அறிவுறுத்தி வந்திருந்தும், எமக்கு உரியதாக இருக்கவேண்டிய அது, எம்மை விட்டு நீங்கி உம்மிடமே சென்று விடுகின்றது! எமது நெஞ்சமே எமக்குத் துணையாகா தொழிந்தால், வேறு எங்களுக்குத் துணையாவார் யார்? கண்டவர் சிந்தை கவரும் கட்டெழில் மேனிக்கு இந்திர நீலத்தை இணையாகக்கொண்டவரே! இமைப் பொழுதில் எம்மவரை யெல்லாம் அடிமைப்படுத்திக்கொண்டுவிடும் இந்திர ஜாலத்தைத் துணையாகக் கொண்டு எத்தகைய பிணக்குகளையும் கணத்தில் ஒழித்துவிட வல்லவராக விளங்குகின்றீர்! மாயவரே! உமது மாயம் எவராலும் அறியவொண்ணாதது! எவரையும் எளிதில் வென்றுவிடக் கூடியது! உமது மாயையும் உம்முடனேயே நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்துகொண்டு வருகின்றது!

எப்பொழுது எமது நெஞ்சை அடிமை கொண்டு விட்டீரோ, அப்பொழுது முதல் அதன் கவலையை அகற்றியருள வேண்டுவது உமது முதற்பெருங் கடமையன்றோ? உமது வஞ்சக வினைகளால் எமது நெஞ்சம் படும் சஞ்சலத்தைக் கண்டும், அதன் மேல் திருவுளம் இரங்கி அதற்கு ‘அஞ்சல்’ ‘அஞ்சல்’ என்று அருளாத உம் ஆண்மை என்ன ஆண்மை! கருவுற்றிருந்த காலத்தில், தான் பெற்றெடுக்க விருக்கும் குழந்தை, பெண் குழந்தையாகவே இருக்கும் என்று சோதிட வல்லுநர் கூறக் கேட்ட அசோதை, பிரசவ காலத்திற்கு முன்னரே பெண் குழந்தைக்கு உரிய சிறந்த நகைகளை யெல்லாம் செய்து வைத்துக்கொண்டிருந்து, இறுதியில் நீர் ஆண்குழந்தையாக இருந்தது கண்டும் அந்நகைகளையே உமக்கு அணிந்து வளர்த்து வந்ததனால், நீரும் ஆண்மையை இழந்து விட்டீர் போலும்! பெண்மணிகளின் பொருட்டுப் பண்டைய வீரர்கள் தங்கள் உயிரையே வழங்கி யிருக்க, எம்போன்ற ஏழையராகிய பெண்களின் உயிரையே கவர்ந்து கொண்டுவிடும் உமது வீரம் மிக அழகாக இருக்கிறது! நீர் கடியீர்! கொடியீர்! அறிவரிய பெரு மாயத்தீர்! ஆயினும், கொடிய எம் நெஞ்சம் உம்மையே எப்பொழுதும், எந்நிலையிலும், தஞ்சமாகக்கொண்டு விடுகின்றது!

உம்மிடம் நாங்கள் கொண்டு விட்ட கரவறியாத தூய மெய்க்காதல் எத்தகையதென்பதைக் கேவலம் வாய் மொழிகளால் விரித்துரைத்து விளக்கிக் காட்டக்கூடிய ஆற்றல் எனக்கு இல்லை. அனைவர் மனத்தையும் அறிந்து வைத்துள்ள தனிப்பெருங் கள்வராகிய தமக்கே, எமது காதலின் தன்மை எத்தகையதென்பது இனிது தெரியும். இத்தகைய எமது சீரிய காதலைச் சிறிதும் மதியாது புறக்கணித்து விட்டு, உம்மைப் பிரிந்திருக்கும்போது அப்பிரிவுக்கு ஆற்றுமைப்பட அறியாத பசுக்களின் மேல் அளவிறந்த அன்பு கொண்டவராய், எங்களை இங்கே தவிக்கவிட்டு விட்டு அவற்றின் பின் ஓடிப் போய் விடுவதும் உமக்குத் தருமந்தானோ? ஆருயிர்களைக் காப்பது உமது தொழிலானால், ஆநிரையைக் காப்பதோடு எங்களையும் காத்தருள்வது உமது கடனன்றோ? குறிப்பிட்ட இடத்தில் வளைத்து வைத்த கோக்களைக் காக்கும் திறத்தைக் காட்டிலும், பல மனைகளில் வசித்திருப்பினும் சிந்தையை உம்மிடமே செலுத்தி நிற்பவர்களான எங்களைக் காக்கும் திறம் பன்மடங்கு சிறந்ததன்றோ?

உமது கமல மலரைப் பழித்த திருவடிகளின் பெருமையையும் மென்மையையும் நாங்கள் பெரிதும் போற்றுகின்றோமே யன்றி, நீர் சிறிதும் நினைப்பதாகக் காணோம்! நாங்கள் ஆராக் காதலோடும் பேரார்வத்தோடும் வருடும்படியான கோமள மலரடிகளை, காட்டிலும் மேட்டிலும் கற்களிலும் முட்களிலும் நீர் வருந்தச்செய்து வருவதை நினைக்க நினைக்க எமது நெஞ்சு பெரிதும் நெக்குருகுகின்றது! உமது திருவடி மலர்களின் அருமையை உணராது அவற்றைத் தினமும் சிவந்து வருந்தித் திரியச் செய்வித்து வரும் பசுக்களை யெல்லாம், திருவாய்ப்பாடியினின்றும் துரத்தி விட்டாலும் எங்களது சஞ்சலம் நீங்கிவிடும். எங்களது நெஞ்சத் தாமரையில் வைத்துக் கொண்டு இன்புற்றிருக்க விரும்பி நிற்கும் உமது செங்கமல வன்ன மென் மலரடிகளை, அன்பின் பசையற்ற வன் கண்ணரது நெஞ்சம் போலும் வெப்பம் மிகுந்த காட்டில் வீணில் வருந்தச்செய்யப்போகிறீரே என்று நீர் வனத்திற்குப் புறப்படுவதைக் காணுந்தோறும், எமது நெஞ்சம் அனலிடைப்பட்ட மெழுகென உருகா நிற்கும். மேலும், வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த போதே உம்மைக் கொல்ல எண்ணி வந்த அசுரர்களைப்போலவே, காட்டிலும் மாயம் வல்ல பற்பல அசுரர்கள் வஞ்ச நெஞ்சக் கஞ்சனால் ஏவப்பட்டவர்களாய்த் தக்க சமயம் பார்த்திருந்து உமக்குக் கேடு சூழ முயலுதல்கூடும் என்னும் பேரச்சம் இன்னும் எங்களது நெஞ்சினின்றும் நீங்கிய பாடில்லை. எங்களது இன்னுயிர்க்கு இன்பூட்டக்கூடிய இணையற்ற துணைவராகிய நீர் எம்மை விட்டுப் பிரிந்து பசுக்களின் பின் சென்றுவிட்டால், எமது அகத்துயரை ஆற்றக்கூடிய துணைவர் வேறு எவர்? எங்களுக்கு நீர் துணையாகவும் உமக்கு நாங்கள் துணையாகவும் இருப்பதாகவே எங்களது எண்ணம். ‘துணை’ என்னும் சொற்பொருளுக்கு நீர் ஒருவரே யல்லவோ தனி உரிமை உடையவராவீர்! தோழிமாரும் ஏனையோரும் எமது துயரை நீக்கக் கூடிய துணைவர் ஆவரோ?

எவ்விடத்தில், எச்சமயத்தில், எந்நிலையில் இருந்தாலும், எத்தொழிலில் தலைப்பட் டிருந்தாலும் உம்மையே உன்னி உன்னி உருகும் உள்ளத்தை உடையவர்களாகிய எங்களைப் புறக்கணித்து நீர் ஆநிரை பின் சென்று விட்டீராயின், எமது கருவிழிகளென்னும் ஊற்றினின்றும் எழும் நீர்ப் பெருக்கு, மார்பகங்களின் வழியே இழிவதாகி உடலையும் உயிரையும் ஒருங்கே சுடத் தொடங்கி விடுகின்றதே! இங்கிருந்து இவ்வளவுநேரம் எங்கட்குக் காட்சி யளித்தருளிய தன் பயனாக இன்பம் அனுபவித்தற்கு உரிய சிற்சில கணங்களிலும், ‘எப்பொழுது எழுந்து சென்று மறைந்து விடுகின்றீரோ’ என்று எங்களது நெஞ்சில் மிகும் சஞ்சலம் அக்கொஞ்ச நேர இன்பத்தையும் அனுபவிக்க வொட்டாமற் செய்து விடுகின்றதே! உம்மைப் பிரிந்திருக்க நேரும் ஒரு பகல் நேரம், எமக்கு ஊழிக்காலம் போலல்லவா தோன்றுகின்றது! உமது பிரிவால் விளையும் துயரைப் பொறுக்க இயலாமல் இவ்வளவு பாடுகள் படும் எங்களை இங்கே தவிக்க விட்டுவிட்டு, வனத்திலே உம் எதிரிலேயே உமக்கு வெகு

தூரத்தில் மேயச் சென்றுவிடுவனவாகிய—உமது பிரிவின் வருத்தம் தெரியாத, பசுக்களின் பின்னே சென்றுவிட நித்தமும் பேரார்வம் கொண்டு நிற்பது, அன்பின் திறத்தை நன்கு உணர்ந்துள்ள உமக்கே அழகாக இருக்கின்றதா? உம்மையே தஞ்சமாகக் கொண்ட எம்மவரை இவ்வாறெல்லாம் நாடோறும் வருந்த வைத்து வரும் வரையில், 'தன்னைச் சரணடைந்தோரைக் கை நழுவவிடாதவன்' என்னும்பொருளுடைய 'அச்சுதன்' என்னும் திருநாமத்தை வகிப்பது உமக்குப் பொருந்துவதாகுமோ?'' என்று வினவி நின்றாள்.

இவ்வாறு அவ்வாயர்மாது பேசக் கேட்ட கண்ணபிரான், தனது செந்தாமரைக் கண்களால் அந்நங்கையைக் குளிர நோக்கியருளி, "உங்களது நெஞ்சில் என் வடிவம் என்றும் குடிகொண்டிருக்குமாயின், எனது தூல உடலைக் காணாது நீங்கள் ஏங்குவானேன்? நான் ஆன் பின் போனால்தான் என்ன? வனத்தில் திரியும் வேளைகளிலும், என் மனத்தில் உங்களை மறப்பதும் உண்டோ? எனது பெற்றோர் இட்ட கட்டளைகளைத் தட்டாது செய்ய வேண்டுவது எனது கடமையாதலின், ஆநிரை பின் செல்லாமல் நிற்கவும் கூடுமோ? உயிரோடு கலந்த உண்மைக் காதலின் ஆற்றலினாலும், 'துன்பங்களுக்குப் பின் இன்பம் உண்டு' என்னும் உறுதியான நம்பிக்கையினாலும் எத்தகையசோதனைகள் நேர்ந்தாலும் அவற்றை மிக்க பொறுமையுடன் சகித்துக் கொண்டு அமைதி நிலை கடவாதிருக்கக்கூடிய உங்கள் பொருட்டு, என்னையே தங்களுடைய இன்னுயிர்த் தோழனாகவும் இன்பூட்டும் தலைவனாகவும் எண்ணிக்கொண்டிருப்பனவும் தங்களது சாந்தம் வாய்ந்த தோற்றத்தினாலே எனக்குப் பெருமகிழ்வூட்டுவனவுமாகிய பசுக்களை ஏங்க வைக்க என்மனம் இசையுமோ? யான் பிரிந்து சென்ற பின்னும் எனது பாலலீலைகளைச் சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தைத் துயரை ஒருவாறு தேற்றிக் கொண்டு விடக்கூடிய ஆற்றல் பெற்றுள்ள உங்களது அன்பில் மயங்கி, யான் அருகில் இல்லாவிட்டால் வயிறாரப் புல்லை மேயவும் மனங்கொள்ளாமல் பெரிதும் வாடித் தவிக்கக்கூடிய ஏழைப் பிராணிகளாகிய பசுக்களின் பேரன்பைப் புறக்கணித்து விடத் துணிவு கொண்டு விடுவது தருமமாகுமோ? யான் பசுமை படர்ந்த மரத்தடியில் குழலூதி நிற்கும்போது, அக்குழலிசை இன்பத்தில் ஈடுபட்டு மேய்கை தவிர்ந்து - மேய்ந்த புல்லும் கடைவாய் வழிசோர - சாந்தம் மிகுந்த யோகிகளைப்போன்றும் ஓவியத்தில் தீட்டிய உருவங்களைப் போன்றும் அசைவற்று நிற்கும் பசுக்களின் காட்சியையும்; காட்டிலுள்ள ஒப்பற்ற இன்பம் ஊட்டும் இயற்கைக் காட்சிகளையும்; எனது சிந்தைக்கினிய தோழர்களோடு விளையாடித் திரிவதிலுள்ள மகிழ்ச்சியையும் இவ்விடத்தில் யான் காணக்கூடுமோ? ஆதலால், என் பிரிவுக்காக வருந்தாது எனது சிறு பருவ விளையாடல்களில் சிந்தையைச் செலுத்தி மகிழ்ந்திருப்பீர்களாயின், மாலை வேளையிலே உங்களுக்கு உவகையூட்டும் காட்டுப் பூக்களையும், இனிய கனிகளையும் சேகரித்துக் கொண்டுவந்து தருவேன். நீங்கள் அவ்வாறு இன்புற்றிருக்க இசையாவிடினும், பிரிந்திருந்து வருந்தினால் தானே பிரிந்து சென்ற எனது அருமை உங்களுக்குச் செவ்வியில் தெரியக் கூடும்!''— என்று கூறி, அவ்வாயர் மாதரது நெஞ்சமனைத்தும் தன்னொடு தொடர்ந்துவரத் தொழுவை அடைந்து, தனது வரவுக்காகப் பேரார்வத்துடன் காத்துக்கொண்டிருந்த தனது மானிடத் தோழர்களாகிய ஆயர் சிறுவர்களோடு மிருகத் தோழர்களாகிய பசுக்களை ஓட்டிக்கொண்டு உற்சாகம் மிகுந்த உள்ளத்துடன் காட்டை நோக்கிச் சென்றான்.

"தொழுத்தையோம் தனிமையும் துணை பிரிந்தார் துயரமும் நினைகிலை கோவிந்தா! நின், தொழுத்தனில் பசுக்களையே விரும்பித் துறந்தெம்மை யிட்(டு)அவை மேய்க்கப்போதி!, பழுத்த நல்லமுதினின் சாற்று வெள்ளம் பாவியேன் மனமகந்தோறும் உள்புக்(கு), அழுத்த - நின் செங்கனி வாயின் கள்வப் பணிமொழி நினைதொறும் ஆவி வேமால்''—

என்று கண்ணபிரான் பக்கலில் மிகுந்த சீரிய காதலின் பயனாக, தன்னை விட்டுத் தனது ஆருயிர்க் காதலன் ஆநிரை பின் சென்றுவிடுவதைச் சகிக்கவொண்ணாது, 'யான் நின்னைப் பிரிந்திருக்க ஆற்றேன்; எம்பெருமான்! பசு மேய்க்கப் போகேல்!' என்று பெரிதும் வேண்டி நின்றும், அக்காதலியின் வேண்டுகோளுக்கு இணங்காதவனாய் ஆநிரையின்பின் அச்சுதன் சென்ற தன் நுட்பத்தை உன்னுங்கள்; உணருங்கள். 'பரம பதத்தில் இருப்பைக் குலைத்தன்றோ, பசுநிரை மேய்க்கப் போந்தது!' என்னும் பெரியார் மொழியைக் கருதுங்கள். சாந்தத்தை நினைவூட்டும் பசுக்களைப் போற்றி வளர்த்து, சாந்த மயனை இறைவனது இன்னருளை எய்த முயலுங்கள்.

தாவீது மன்னரின் தனிக் கோள்

[திரு. T. R. சாரங்கபாணி, M. A.,]

(உரிமை ஆக்கியோர்க்குரியது)

(தொடர்ச்சி)

தாவீதின் கடவுளுணர்வு

தாவீது மன்னரின் திருவுளத்தை அவருடைய கீதங்களின் வாயிலாக ஆராயுங்கால், யாக்கையின் நிலையாமை அவருக்கு இளமைப் பருவத்திலேயே இறைவன் மாட்டுப் பேரன்பை மூட்டியதெனக் கூறலும் ஒவ்வும். கர்த்தாவே! நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும்படி என் முடிவையும் என் நாட்களின் அளவு இவ்வளவென்பதையும் எனக்குத் தெரிவியும்'' (39-4) என்று அவர் வேண்டுவதே இதற்குப் போதிய சான்றாகும். உலகிடையுதித்த மக்கள் நீரிடைப் பிறந்த குமிழி போலும் மறைதலைக் கண்டு கண்டு கலங்கிய அவர் தனியாக ஆடு மேய்த்து நிற்கையில் யாக்கையின் நிலையாமையை யுன்னி யுன்னி, ஆறறிவினரின் அறியாமையை எண்ணியெண்ணி, தமக்கு இளமையிலிருந்து ஊட்டப்பட்ட சமய போதனையை யாராய்ந்தாராய்ந்து, தாம் அதுகாறும் ஆராயாது ஆற்றிய பாவங்களுக்காகக் கண்ணீர் விட்டு வருந்தி வருந்தி "என் இருதயம் எனக்குள் வியாகுலப் படுகின்றது. மரணத்திகில் என் மேல் விழுந்தது'' (55:4) என்று அலறுவதை நோக்க யாக்கையின் நிலையாமையே தாவீது மன்னரின் கடவுளுணர்வின் முதற் காரணமாக இலங்குகின்றதெனக் கூறினும் முரணாகாது.

பிறப்பிறப்பெனும் பேரிருளை அழித்தற்கு இறைவனே தோன்றாத் துணைவனென தாவீது உணர்ந்தார். இம்மையிலும் மறுமையிலும் இடையறா யின்ப வெள்ளந் தேக்கும் வாழ்க்கையை நல்கிடும் அன்புருவப்பனையே தாவீது துணையாக நாடினார்; வாயாரப் பாடினார்; மனமாரக் கூடினார். 'மரணத்திகிலி'னின்றுந் தம்மை மீட்டற்கு, 'மரணத்திகி'லொன் மடியும் மானிட வுதவியை அவர் நாடினாரில்லை. "கர்த்தாவே! உம்மை நம்பியிருக்கிறேன்'' (71:1) "நானோ கர்த்தாவே உம்மை நம்பி யிருக்கிறேன்'' (31:14) என்னும் மெய்யுரைகள் ஆண்டவர் தம்மையண்டினவர்களைக் கைவிடுவதில்லை என்னும் பேருண்மையைத் தாவீது உய்த்துணர்ந்தாரென்பதையே வெள்ளிடைமலையென இனிது விளக்குகின்றன.

"சிறுமைப் பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர்" (9 : 9) என்னும் பொய்யாமொழியும் இவ்வுண்மையையே ஓதுகின்றது. "கர்த்தாவே! நீரென்னை ஆராய்ந் தறிந்திருக்கிறீர்......என்நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர்......என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும்" (139 : 1 - 4) ஆதலான், மரணத் திகிலினின்றும் மீட்டற்கு ஏற்ற துணைவர் ஆண்டவரேயாவர் என்பது ஈண்டுத் தாவீது நனியுணர்ந்தாரெனக்கூறலும் ஒவ்வும்.

இவ்வாறு யாக்கையின் நிலையாமையும் மரணத்திகிலும் பிடர்பிடித் துந்த இறைவனையே தோன்றாத் துணைவனாக நாடிய தாவீது மன்னர், தம்முடைய அறியாமையான் தாம் ஆற்றிய பாவங்களை மறந்தாரில்லை. அவருடைய பாவ வுணர்வு பிறர் ஓதப் புலனாகிய உணர்வன்றெனவுங் கூறலாகும். "என் மீறுதல்களை யானறிந்திருக்கிறேன், என் பாவம் எப்போழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது" (51 : 3) என்னும் அறவுரைகளே இதனைவலியுறுத்தும். தாவீது தாம் அறியாமையினாற்றிய பாவங்களை யெண்ணியெண்ணி வருந்தி வருந்தி அழுதழுது இறைவன் அருளைப் பெறுவதையே அடிப்படையாகக்கொண்டு அவருக்கு ஆயிரவாண்டுகளுக்கப்பால் உவமை யென உலகுதித்த இரக்ஷகரும் எடுத்துக்காட்டாகக் "கெட்ட குமாரன்" கதையை எடுத்தோதுதல் நோக்கற் குரியது. மேலும் அறியாமையான் ஆற்றிய பாவங்களுக்காக வருந்துதலே பாவவுணர் வாகும் என்பதை விளக்க வேண்டி "தன் பிழைகளை யுணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக் கென்னை நீங்கலாக்கும்" (19-12) என்றவர் இறைவனை இறைஞ்சுகின்றார். பாவமென ஓர்ந்தும் ஒரு காரியத்தை இயற்றிப் பின்னர் பாவவுணர்வான் பரமன் தம்மை மன்னித்திடுவான் என்னும் கேவல பாவவுணர்வு தாவீது மன்னர் தமது வாழ்க்கையிலும் தம்முடைய அறவுரைகளிலும் எடுத்துக் காட்டாக எடுத்துக் காட்டிய பாவ வுணர்வன்றென்பது இம்மெய்யுரையான் இனிது போதருகின்றது.

இத்தகைய பாவ வுணர்வான் தம்மைப் பண்படுத்திக்கொண்ட தாவீது மன்னர் இறைவன் பேருளை யிரந்திடுங்கால் அவருடைய அற நெறியையுந் தமக்குப் புகட்டுமாறு இறைஞ்சுவது நோக்கற்குரிய தொன்றாகும். "கர்த்தாவே! உமது வழியை எனக்குப் போதியும்" (86 : 11) "உமக்குப் பிரியமானதைச்செய்ய எனக்குப் போதியும்" (143: 10) என்று அவர் ஆண்டவன் அருளை வேண்டி 'அவனருளால் அவனடி வணங்கி' என்னும் மெய்புரையையே தமது கடவுளுணர்வின் அடிக்கோலாகக் கொண்டு, அமலன் அருள்வேட்டல், அவருடைய கடவுளுணர்வின் இயல்பையே இனிது விளக்குகின்றது. பாவவுணர்வால் மயங்கித் தன்னைத் தானே நொந்து தான் அறியாமல் செய்த குற்றங்களுக்காக வருந்தி ஆவி சோர, அகம்புழுங்க, அறிவு மயங்க, கண்கள் நீரை யூற்றென மல்க, கதறும் பக்தன் தனக்குத் தோன்றாத் துணைவனாகவும், அன்பு நிறைந்த அப்பனாகவும் நிற்கும் அமலனை அவனுடைய நன்னெறியைத் தனக்குப் புகட்டுமாறு வேண்டுவது முறையே யன்றோ!

அத்தகைய பேருளைப்பெறுவதற்கு அவர் அகத்தூய்மையே இன்றி யமையாததென ஓர்ந்தார். புறவேடங்களில் அவர் மனம் நாடவில்லை. ஆண்டவன் உறையுங் கோயிலாகிய புந்தி வட்டத்தைத் தூய உறையுளாக்க அவரே "தேவனே! சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்" (51 : 10) என்று வேண்டுவது இவ்வுண்மையை விளக்கும் "தாயின் பால் மரந்த குழந்தையைப் போல நான் என் ஆத்துமாவை அடக்கி அமரப் பண்ணுவேன்" (131 : 2) என்றறைந்த அவர் "தேவனே என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது" (1-8 : 1) என்று உரிய பருவத்தில் உரைப்பது உய்த்துணர வேண்டுவதொன்றாம். அத்தகைய அகத்தூய்மை எய்தியவுடனே அவர் ஆண்டவர் அன்பு மிகுந்தவர் என்று ஓர்ந்து "கர்த்தாவே! உம்மில் அன்பு கூறுவேன்" (18 : 1) "நானே நீதியில் உமது முகத்தைத் தரிசிப்பேன். நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தி யாவேன்." (17 : 15) என்று ஆநந்த மிகுந்து அறைவது அவருடைய மெய்ப் பக்தியை யன்றோ ஓதுகின்றது.

இன்பம் நுகர்ந்த காலத்தில் இறைவனைப் போற்றியதுபோலும் துன்பம் நுகர்ந்த காலத்திலும் சவுலுக் கஞ்சியோடி, பல்லாண்டுகள் நிற்க நிழலின்றி இடிப்புண்ட காலத்திலும், தாவீது இறைவனை மறந்தாரில்லை. தமக்கு ஆண்டவன் உதவி செய்யவில்லையென்று தற்கால நாகரிக தடபுடலுக்கிணங்க "பாழுந் தெய்வத்திற்குக் கண்ணில்லை' என அவர் மறந்தும் நினைந்தாரல்லை. மாறாத் துன்பம் அவரையணுகிய சமயத்திலும், மனத்துயரம் அவரை யண்டிய சமயத்திலும், ஓயாக் கவலை அவரை வாட்டிய காலத்திலும், தோன்றாத் துணைவனாகிய எல்லாம்வல்ல ஆண்டவன்மாட்டு அவருக்கிருந்த நம்பிக்கை எள்ளளவுங் குறைந்திற்றில்லை. இளமையிலிருந்து இறைவன்மீது அவர் கொண்ட மாறா நம்பிக்கையே துன்பமெய்திய காலங்களிலும், துயர மணுகிய சமயங்களிலும் அவரை "எனக்கிரங்கும் தேவனே எனக் கிரங்கும்" (57 : 1) "தேவனே! என்னைக் காப்பாற்றும்" (16 : 1) "என்மேல் இரக்கமா யிருங் கர்த்தாவே" (6 : 2) "கர்த்தாவே ஏன் துயரத்தில் நிற்கிறீர்? ஆபத்து நேரிடுகிற சமயங்களில் நீர் ஏன் மறைந்திருப்பீர்" (10 : 1) "*என் தேவனே! என் தேவனே!! ஏன் என்னைக் கைவிட்டீர்? எனக்கு உதவி செய்யாமலும் நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமா யிருக்கிறீர்? என் தேவனே! நான் பகலிலே கூப்பிடுகிறேன். ஏன் தூரமா யிருக்கிறீர்? இரவிலே கூப்பிடுகிறேன். எனக்கு அமைதலில்லை." (22 : 1) "கர்த்தாவே! என்னைக் கைவிடாதேயும். என் தேவனே! எனக்குத் தூரமா யிராதேயும். என் இரட்சிப்பாகிய ஆண்டவரே எனக்குச் சகாயஞ்செய்ய தீவிரியும்" (38 : 21-22) என்று அழுதழுது ஆண்டவன் அருளை வேண்டுமாறு தூண்டியதே யல்லான் அவரை ஆண்டவரை மறக்குமாறும் பழிக்குமாறும் தூண்டிற்றில்லை. இஃதன்றோ மெய்ப்பக்தியின் இயல்பு. கடவுளை நம்பினோரை இறைவன் கைவிடலாகாதென அவருடன் வாதாடுவது போலு மன்றோ இவ்வுரைகள் இலங்குகின்றன.

மாறில்லா நம்பிக்கை யெனும் படகேறி பாவவுணர் வெனுங் கோலூன்றி இறப்பெனுங் கடல் கடந்து ஆண்டவனருள் என்னுங் கரைநாடி அன்பெனும் நெறிபற்றிய மெய்யடியார்களுள் ஒருவராகிய தாவீது தாம் அநுபவ வாயிலாக அழுதழுது இரந்திரந்து பற்றிய பரமன் "கர்த்தர் என் கன்மலையும் என் கோட்டையும் என்னுடைய இரட்சகரும் என் தேவனும் நான் நம்பியிருக்கிற என் துருகமும்,என் கேடகமும் என் இரக்ஷணியக் கோம்பும் என் உயர்ந்த அடைக்கலமுமா யிருக்கிறார்"(18 : 1-2) என்றறைவது அடியானுக்கும் ஆண்டவனுக்கும் உள்ள நெருங்கிய சம்பந்தத்தையே எடுத்தோதுகின்றது.

வேதத்தைத் துருவித்துருவி ஆராய்ந்து அறிற்பதிந்து கிடக்கும் பேருண்மைகளை யோர்ந்து அவ்வுண்மைகளுக்கிணங்க ஒழுகி, பேரின்ப நுகர்ந்து "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையக" மென ஆண்டவன் இயல்பை, தான் பற்றிய சமய நெறியை, நாடிய அன்பு வழியை, "கர்த்தர் எனக்கு நன்மை செய்தபடியால் நான் அவரைப் பாடுவேன்" (13 : 6) என பக்தி மனங் கமழுங் கீதங்களின் வாயிலாக நமக்குத் தாவீது அருளினார். இதுகாறும் அவருடைய கடவுளுணர்வை ஆய்ந்தறிந்தயாம், இனி அவருடைய கடவுளின் இயல்பை ஆராய்வோம்:

*உலகின் பாவங்களுக்காக உயர்ந்த ஆட்டுக் குட்டியைப்போல் சிலுவையில் அறையப்பட்ட இரக்ஷகர் ஆங்கு அருளிய அறிவுரைகளுள் இவ்வுரையும் ஒன்றென்பது நோக்கற்குரியது.

நமது நாட்டில் வழங்கும் பழங்கதைகள்

[திரு. சோமசுந்தர தேசிகர்]

(உரிமை ஆக்கியோர்க்குரியது)

நாம் சிறுபிள்ளையாகப் பள்ளிக்கூடத்தில் வாசித்துக்கொண் டிருக்கும்போது அந்திரோகிலிசும் சிங்கமும் என்று ஒருகதை படித்திருக்கிறோம். அக்கதை அனேகருக்கு ஞாபக மிருக்கலாம். இருந்தாலும் அக்கதைகேட்டிராத சிலரின்பொருட்டுச் சுருக்கமாகக் கீழே வரைகின்றேன்.

முன்னாளிலே பெரியோர் தமக்குக் கீழ்ப்பட்ட மக்களை அடிமைக ளாக்கி அவ்வாறே நடத்தி வந்தனர். துன்பம் சகிக்க முடியாமையால் அவர்கள் ஓடிப்போவார்களானால் அவர்களை யானையின் காலில் இடறுவதும், சிங்கம்புலிபோன்ற துஷ்ட மிருகங்களுக்கு இரையாக்குவதும் வழக்கம். அவ்விதமாகவே ஒரு பிரபு வீட்டிலிருந்த அந்தரோகிலிசு என்ற அடிமை, துன்பம் சகிக்க முடியாமல் காட்டுக்கு ஓடிப்போய் விட்டான். காட்டில் ஒரு சிங்கம் எதிர்ப்பட்டது. அதனைக்கண்டு இவன் பயங் கொண்டானாயினும் அது நடக்கமுடியாமல் நொண்டிக்கொண்டு வருவதைக் கண்டான். சிறிது தைரியங்கொண்டு அதனருகிற் சென்று காலை மெள்ளத் தூக்கிப்பார்த்தான். காலில் முள்ளொன்று தைத்து வீங்கியிருக்கக் கண்டு அதனை மெள்ளப் பிடுங்கி யெடுத்து சீயையும் பிதுக்கி விட்டுத் தன் இடுப்பிலிருந்த ஆடையிலொரு துண்டு கிழித்து மண்புகாதபடி கட்டினான். சிங்கம் வலியினால் வெளிச்செல்ல முடியாமல் அங்கேயே படுத்து விட்டது. மறுநாள் அதன்வலி யாறிப்போகவே அன்றுமுதல் அந்த அடிமையான அந்திரோகிலிசுடன் நெருங்கிப் பழகி நாய்போலத் தொடர்ந் தலையத் தலைப்பட்டது.

இவ்வா றிருக்கும் போது சிங்கம் தனித்துப் பிடிக்கப்பட்டு அரசனுக்குக் காணிக்கையாகச் செலுத்தப் பட்டது. சிறிது நாளைக்கெல்லாம் அடிமையும் பிடிபட்டான். முன்னமே சொன்னபடி அடிமை ஓடிப்போனவனாகையால் சிங்கத்திற்கு இரையாகத் தீர்மானிக்கப்பட்டான். இந்த வேடிக்கையைப் பார்க்கப் பல ஜனங்கள் கூடியிருந்தார்கள். ஏவலாளர், அடிமையை நிறுத்திச் சிங்கத்தைக் கூட்டினின்றுந் திறந்துவிட்டனர். சிங்கமோ ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து இரையைக் கவ்வுதற்கு மாறாக, நாய்போல் வந்து அடிமையின் கையை முகர்ந்துவிட்டு அவனோடு நின்றது! இதனைக் கண்ட ஜனங்களும் அரசனும் அதிசயமடைந்து, விஷயத்தை யறிந்து அவனை அடிமையி னின்றும் விலக்கி அச்சிங்கத்தையும் அவனுக்கு வெகுமதியாக அளித்துவிட்டனர். இதனைப் போன்ற சாதகக் கதை வருமாறு :—

அலீனசித்த ஜாதகம்

காசியிலே பிரமதத்தன் அரசாண்டு கொண் டிருக்கையிலே 500 பேர் கொண்ட ஒருதச்சர்கூட்டம் இருந்தது. அக் கூட்டம் அருகிலுள்ள காட்டிற் சென்று மரங்களை வெட்டிக் கழித்து வீடுகட்டிப் பிரித்துக் கங்கை வழியாகக் கொண்டுவந்து காசியிலே விற்பதுவழக்கம். இவ்வாறு நெடுநாளாகச் செய்து வந்தனர். அக்காட்டிலே இருந்த யானையொன்றின் காலிலே தற்செயலாக ஒரு மரத்துண்டு ஏறிவிட்டது. யானைக்குக் கால்வீங்கி நடக்கமுடியாமற்போயிற்று. பலநாள் துன்பப்பட்டுக் கொண்டிருந்த யானை அங்கு வேலைசெய்யும் தச்சர்கள் தனக்கு உதவிசெய்ய முடியு மென்று நினைத்து அவர்களிடம் சென்று காலைக் காட்டிப் படுத்துக்கொண்டது. யானையின்கால் வீங்கி யிருப்பதைக் கண்ட தொழிலாளிகள் வீக்கத்தை ஊன்றிப் பார்த்தபோது காலில் ஒரு மரச்சிம்பு ஏறியிருக்கக் கண்டனர். மெள்ள புண்

ணைக்களைந்து சிம்பைப் பிடுங்கியெடுத்து விட்டுப் புண்ணையலம்பித் துணிகொண்டு கட்டிக் காயத்தை யாற்றினார்கள்.

இந்நன்றியை யறிந்த அவ் விலங்கு தச்சு வேலைக்காரர்களுக்கு உதவியாக மரங்களை இழுத்துக்கொண்டு வந்து வேலைசெய்யு மிடத்திற் சேர்த்தும் இன்னும் எந்தெந்த வகையில் உதவிசெய்யக்கூடுமோ அந்தவகையி லெல்லாம் உதவிசெய்தும் வந்தது. ஐநூறு தச்சர்களும் இவ்வேலைக்குப் பிரதியாகத் தங்களுணவில் சிறிது மிகுத்துக் கொடுத்து வந்தனர். இவ்வாறு பலநாள்சென்றன. யானைக்குக்கிழத்தனம்மேலிடவே, தன் பிள்ளையைக் கொண்டுவந்து தச்சர்களிடம் ஒப்புவித்துத் தனக்குப்பதிலாக அதனை வேலை செய்யும்படி அமர்த்தித் தான் காட்டுக்குச் சென்றது. தச்சரும் முன்போலவே நடந்துவந்தனர். யானைக்கன்று இளமையுடைய தாதலால் வேலை செய்தநேரங் கழிந்தபின் தச்சர்களுடைய பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடுவதும் கங்கையில் நீராடுவதுமாக விருக்கும்.

ஒருநாள் அதனுடைய இலத்தி கங்கை வழியாகக் கீழே சென்று காசிக் கரையில் ஒதுங்கிற்று. அரசனுடைய யானைக் கூட்டம் வழக்கம்போலக் கங்கைக்கு வந்தது. நீரடிக்குச் சென்றவுடன் யானைகள் வீறிட்டுக் கொண்டு நீரிற் செல்லாமல் கரையேறிவிட்டன. பாகர்கள் எவ்வளவு முயன்றும் பயன் படவில்லை. இதனைக் கேட்ட மாவுத்தர்கள் கங்கைக் கரையைச் சோதித்த போது ஒரு புதரில் இந்த இலத்தி தங்கியிருக்கக் கண்டதோடு அது மிக்க நறுமணம் வீசுவதையும் கண்டனர். அந்த விட்டையையெடுத்துவந்துநீரிற்கரைத்து யானைகள்மேல் தெளித்துக் காயும்படி செய்தனர். இதனை யறிந்த அரசன் அந்த யானையைத் தச்சர்களிட மிருந்து பெற்றான்.

இடியேறு

சுயராஜ்யம்!

இந்தியா சுயராஜ்யம் பெறுதல்வேண்டும்; பெற்றேதீர்தல்வேண்டும். இந்தியா சுயராஜ்யம் எப்படிப் பெறும்? இதைச் சிந்திப்பதற்கு முன்னர் இந்தியா சுயராஜ்யம் இழந்ததன் காரணத்தைக் கூர்ந்து சிந்தித்து உணர்தல் வேண்டும்.

காரணங்கள் பலபடத் தோன்றும். ஊன்றிச் சிந்திக்கச் சிந்திக்க இடைக்கால ஹிந்துமதமே இந்தியாவின் சுயராஜ்ய இழப்புக்குச் சிறந்த காரணம் என்பது நன்கு புலனாகும். பண்டைக்கால ஹிந்துமதம் என்று குறிப்பிடாமல் இடைக்கால ஹிந்துமதம் என்று குறிப்பிட்டதை நேயர்கள் கவனிப்பார்களாக.

பண்டைக்காலப் புனித வேதாந்தம் பின்னை ஹிந்துமதம் என்னும் பெயர் பெற்றது. அக்கால வேதாந்தம் மன்பதைக்கே உரியதொன்றாக விளங்கிற்று. வகுப்பு, நாடு, நிறம், மொழி முதலிய கட்டுகளை யெல்லாங் கடந்து அஃது ஒளிர்ந்துநின்றது. அத்தகைப் பெருமை வாய்ந்த புனிதக் கொள்கையை இடைக்காலத்தில் சாதிப் பாகுபாடு, பெண்ணடிமை, தீண்டாமை முதலிய கட்டுகள் பற்றிக்கலாயின. உரிமை ஒளிகான்றிக் கொண்டிருந்த ஹிந்துமதத்தில் அடிமையிருள் சூழ்ந்தது என்று சுருங்கச் சொல்லலாம்.

ஹிந்துமதம் அடிமைக் குழியில் வீழ்ந்தமையால், இந்தியாவும் அடிமைக் குழியில் வீழலாயிற்று. அடிமைக் குழியில் வீழ்ந்த இந்தியா மீண்டும் அதினின்றும் எழவேண்டுமானால், அஃது எம்முயற்சியில் தலைப்படுதல்வேண்டும்? தன்னை அடிமைப்படுத்திய சாதி, பெண்ணடிமை, தீண்டாமை முதலியவற்றைக்

களையும் முயற்சியில் அது தலைப்படுதல் வேண்டும். அம்முயற்சியில் சிறப்பாகவும், பிற முயற்சிகளில் பொதுவாகவும் இந்திய மக்கள் தலைப்பட்டு உழைப்பது ஒழுங்கு.

இந்திய சுயராஜ்யத்துக்காக எழுந்த கிளர்ச்சிகள் பல. அவைகளுள் காந்தியடிகள் எழுப்பிய சத்தியாக்கிரகக்கிளர்ச்சியின் மாண்பைச் சொல்லவேண்டுவதில்லை. அப்பெருங் கிளர்ச்சியால் இந்தியா சுயராஜ்யம் பெற்றுவிடுமென்றே உலகம் கருதியது. இப்பொழுது இந்திய சுயராஜ்ய நிலை எப்படியிருக்கிறது! அதைச் சொல்லவும் வேண்டுமோ? வட்டமேஜை மகாநாட்டில் சப்ரு-ஜெயக்கர் கூட்டம் திண்டாடுகிறது. ஸர் சாமியல் ஹோர் தமது நிலையினின்றும் ஓர் இம்மியும் அசைகிறாரில்லை. மாகாண அதிபதிகட்கும் இராஜப் பிரதிநிதிக்கும் உள்ள அதிகாரங்களைப் பாழ்படுத்த ஸர். சாமியல்ஹோர் விரும்புகிறாரில்லை. எல்லாவற்றிலும் ஜனப் பிரதிநிதிகளின் தீர்மானமே முடிந்ததாகக் கொள்ளும் உரிமை இந்தியா பெறுதற்கு இன்னும் எத்துணை நாளாகுமோ தெரியவில்லை.

ஸர்-சாமியல் ஹோரையும் மற்றவரையும் பிடிவாதத்தில் இருக்கச் செய்வது எது? இந்தியாவிலுள்ள ஹிந்துமதமே என்று அறை கூவலாம். ஹிந்துமதத்திலுள்ள கறைபாடுகள் கழுவப்பெறுதல் வேண்டும். அவைகள் இன்று கழுவப்படின் நாளை பிரிட்டிஷார்நிலை வேறுபடுவது திண்ணம். ஆகவே, இந்திய சுயராஜ்யம் இங்கிலாந்தில், வட்டமேஜை மகாநாட்டில், ஸர். சாமியல் ஹோர்கையில் இருப்பதாகக் கருதவேண்டுவதில்லை. அஃது இந்தியாவில், ஹிந்துமதத் தெளிவில் இருக்கிறது என்பதை நம்மவர்கள் உணர்ந்து நடப்பார்களாக.

இங்கிலாந்தில் வட்டமேஜை மகாநாட்டில், சப்ரு-ஜெயக்கர்கூட்டம் திண்டாடுவதுபோல, இந்தியாவில் ஒற்றுமை மகாநாட்டில் மாளவியர்-ஆச்சரியர் கூட்டமும் திண்டாடுகிறது. இரு கிழவர்களும் வலிந்து வலிந்து ஈர்த்து ஈர்த்து ஒற்றுமை நாடுவதால் ஆன்ற ஒற்றுமை ஏற்படாது; பின்னே உலுக்கும் ஒற்றுமையே ஏற்படும். ஆன்ற ஒற்றுமை, ஹிந்துமதம் தூய்மைப்படுவதி லிருக்கிறது என்று பன்முறை கூறவேண்டுவதில்லை.

காந்தியடிகள் வானத்தையும் பிளக்க வல்ல ஒரு பெருங் கிளர்ச்சியை எழுப்பியும் என்ன ஆயிற்று? சட்டசபை விலக்கு, பள்ளி விலக்கு, நீதிமன்ற விலக்கு, கள்ளுக்கடை மறியல், பல்லாயிர மக்கள் சிறைவாசம் முதலியன என்ன செய்தன? காந்தியடிகள் என்செய்வார்! அவர் சுயராஜ்யத்துக்காக அறவழியில் முயல்கிறார். சாதி ஹிந்துமதம் - பெண்ணடிமை ஹிந்துமதம் - தீண்டாமை ஹிந்துமதம் குறுக்கிட்டால் காந்தியடிகள் என் செய்வார்! மற்றவர்களும் என்செய்வார்கள்!

காந்தியடிகள் சிறைக் கோட்டத்திலிருந்து கொண்டே தீண்டாமையைத் தொலைக்க இப்பொழுது முனைந்து நிற்கிறார். அவ்வுரிமையை அவருக்கு வழங்கிய அரசாங்கத்துக்கு நன்றி உரியதாக! காந்தியடிகள் சட்டமறுப்பு இயக்கத்தை முற்றும் நிறுத்தி, வெளிப் போந்து, தீண்டாமையை விலக்க முயன்றால் நலன் விளையும். சட்டமறுப்பைப் பார்க்கிலும் தீண்டாமை விலக்கு மிகச் சிறந்தது என்பதைக் காந்தியடிகள் நன்கு உணர்ந்தே கடனாற்றி வருகிறாரென்று நாம் நம்புகிறோம்.

தீண்டாமையைப் பற்றிக் காந்தியடிகள் பல ஆண்டுகளாகப் பேசினார்; எழுதினார். அப்பேச்சையும் எழுத்தையும் சாதிபூதம் விழுங்கி விழுங்கி ஏப்பமிட்டது. இப்பூத முள்ளவரை காந்தியடிகளின் சுயராஜ்ய முயற்சி பன்முகங்கொண் டெழினும் பயன் தாராது என்பது உறுதி. பேச்சாலும் எழுத்தாலும் பயன் விளையாமை கண்டே காந்தியடிகள் தீண்டாமை விலக்குக்கென்று ஓர் இயக்கத்தைச் செயலில் நடாத்தி வருகிறார். அவ் வியக்கத்துக்குத் தோன்றியுள்ள எதிர்ப்புகளை உலகம் கவனித்தே வருகிறது.

இவ்விருபதாம் நூற்றாண்டில், சுதந்திரக் கூச்சலும், சமத்துவக் கூக்குரலும் வான்முகட்டையுங் கிழித்துச் செல்லும் இந்நாளில், மக்களுக்குள் தீண்டாமை கூடாது என்றெழுந்த ஓரியக்கத்துக்கு எதிர்ப்புகள், ஹிந்துமதத்தின் பெயரால் புற்றீசல் போல நாலுபக்கங்களினின்றுங் கிளம்பி வருகின்றன என்றால், இந்தியா சுயராஜ்யத்துக்கு உரியதாகுமா என்று நமக்கு நாமே நம்மனச் சான்றைத் தொட்டுக் கேட்போமாக.

வைதிகர்கள் என்று தங்களை நினைத்துக் கொள்வோர்களின் பேச்சுகளையும் எழுத்துகளையும் ஈண்டு ஆராயவேண்டுவதில்லை. அவர்கள் காட்டும் பிரமாணங்கள் தீண்டாமை வேண்டுமென்று. தீண்டாமையை நாட்டியவர்களால் எழுதப்பட்டன. அவைகளைப் பற்றிய ஆராய்ச்சி தற்கால உலகிற்கு அநாவசியம்; முற்றும் அநாவசியம்.

வேதம் கீதை முதலியவற்றில் தீண்டாமை உண்டு என்று ஒரு சாராரும், இல்லை என்று மற்றொரு சாராரும் சொல்கிறார். இவ்வாதப் பிணக்குக்கு முடிவே ஏற்படாது. இப்பிணக்கில் சீர்திருத்தக்காரர்கள் தலைப்படாதிருப்பது சிறப்பு. வேதத்திலோ கீதையிலோ பிறவற்றிலோ தீண்டாமை இருப்பதாகவே வைத்துக் கொள்வோம். அந்நூல்களைக் கொண்டு மக்களுக்குள் தீண்டாமையை நிலை பெறுத்தப் பார்ப்பது அறமா என்று கேட்கிறோம். தற்கால இயற்கைத் தேவதை - தற்கால இயற்கை வேதம்-தற்கால இயற்கைக்கீதை தீண்டாமை கூடாது என்று சொல்கின்றன. அவைகளின்படி நடக்க வேண்டுவது அறிஞர் கடமை. உலகத்தில் எங்குமில்லாத தீண்டாமை, இந்தியாவில், ஹிந்து மதத்தில், இருந்தால் அதைப் பாதுகாக்கவேண்டும் போலும்!

வைதிகர்கள் என்று சொல்லப்படுவோர்கள் சார்பாக ஆங்காங்குள்ள சங்கராச்சாரியர்கள் குருவாயூர் ஆலயத் தருமகர்த்தருக்குத் தந்திச் செய்திகள் அனுப்பிய வண்ணமா யிருக்கிறார்கள்; "தீண்டாமையைக் கோயிலுள் பாதுகாத்து வாருங்கள்" என்று அவருக்கு அறிவு கொளுத்திய வண்ணமா யிருக்கிறார்கள். சங்கராச்சாரியர்களெல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து ஒருமகாநாடு கூடப் போகிறார்கள் என்றும் அறிகிறோம். இவர்கள் ஒன்றுபட்டுப்பேசுங்கால்எவர் ஆதிசங்கரர் பிரதிநிதியாயிருப்பர் என்பதைஅறியவிரும்புகிறோம். ஒருசங்கராச்சாரியர் எல்லையில் இன்னொரு சங்கராச்சாரியார் வருவாராயின், அவரை ஆண்டுள்ளார் சங்கராச் சாரியாராகக் கொள்வதற்கு நியாயமில்லை. சங்கராச் சாரியார்கள் இப்பொழுது அநியாயத்தில் இறங்கியிருக்கிறார்கள் என்றே கூறுதல் வேண்டும்.

ஆதி சங்கராச்சாரியார், எல்லாம் பிரம சொரூப மென்றும், அதற்கு வேறாக ஒன்றுமில்லையென்றும், பிரமத்துக்கு வேறாகக் காணப்படுவனவெல்லாம் கானற்சலமென்றும், மித்தைஎன்றுங் கூறிச்சென்றார். எல்லாம் பிரம சொரூபமாயிருக்கும்போது, தீண்டாமை எங்கிருந்துவந்து நுழைந்ததோ தெரியவில்லை! ஆதிசங்கரர் பெயரால் மடத்தில் வாழும் சங்கராச்சாரியர்கள், தங்கள் முதல்குரு அறிவுறுத்திய வேதாந்தத்தைப் பரப்ப முயலுந் துறையில் நண்ணுவது அறச்செயலாகும். அதை விடுத்துத் தீண்டாமைக்குத் துணை நின்று தந்திகள் கொடுப்பதும் மகாநாடுகள்கூடுவதும் அறச்செயல்களாகா. மடத்துச் சங்கராச்சாரியர்களை, ஆதி சங்கராச்சாரியார் பிரதிநிதிகளாக வாழுமாறும், சாதி சங்கராச்சாரியர்களாக வாழா திருக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

காந்தியடிகள் இயக்கத்தைத் தொடங்கிவிட்டார். அது நாடுமுழுவதும் காட்டுத் தீப்போல் பரவி வருகிறது. இவ்வேளையில் வைதிகக் கூட்ட மொன்று எர்வாடா சிறைபுகுந்து காந்தியடிகள் முன்னிலையில் தனதுவாதங்களைக்கிளத்தப்போகிறதென்றும், அதற்குக் காந்தியடிகளும் இணங்கி யிருக்கிறாரென்றும் கேட்டு வருந்துகிறோம். தீண்டாமை

நாட்டியவர்களால் எழுதப்பெற்ற ஸ்மிருதிகளில் தீண்டாமை இருந்தேதீரும். அந்நூற்பிரமாணங்களை எப்படிக்கொள்வது? ஆதலால் ஸ்மிருதி வாதிகளின் வழக்குகளுக்கு அடிகள் செவி சாய்க்க இணங்கா திருப்பது நல்லது.

பிராயச்சித்தப் பேச்சுகளும், புதுக் கோயில் பேச்சுகளும், இன்ன பிறவும் மெல்லமெல்ல புகைவிடத் தொடங்கியிருக்கின்றன. இவைகளுக்குக் காந்தியடிகள் இணங்கவில்லை என்று கேட்டு மகிழ்வெய்துகிறோம்.

தீண்டாமை விலக்கை முன்னிட்டு உண்ணு விரதங்கொள்ளல், வாக்கெடுத்தல்முதலியவற்றில்காந்தியடிகள் இனித் தலைப்படாது, இயக்கத்தை அமைதி முறையில் நடாத்த அவர் முயலவேண்டுமென்பது நமது கோரிக்கை. முதலாவது காந்தியடிகள் விடுதலை யடைதல் வேண்டும். இதற்கு அரசாங்கத்தார் உதவிதேவை. காந்தியடிகள் கருத்துப் பெரிதும் தீண்டாமை விலக்கு மீது படிந்து கிடப்பது அரசாங்கத்தார்க்கு நன்கு தெரியும். இங்கிலையிலுள்ள அடிகள்மீது அரசாங்கத்தார் நம்பிக்கை வைத்து அவரை விடுதலை செய்ய ஏற்றுக்குத் தியங்குதல் வேண்டும்?

தீண்டாமைவிலக்கு இயக்கத்தை ஆங்காங்கே நடாத்தும் தலைவர்கள் சாதிஹிந்துக்களாயிருத்தல் கூடாது. அவர்கள்சாதியில்லாதஆதிஹிந்துக்களாகவேயிருத்தல் வேண்டும். அவர்களுக்குச் சாதிஹிந்துக்கள் பக்கத்துணையாயிருக்கலாம். செல்வாக்கு பெறும் எவ்வியக்கத்திலும் சேர்தல் வேடர்கள் புகுந்து தங்கள்நலனைப்பேணிக்கொள்வது வழக்கம். அவர்களுக்குத்தீண்டாமைவிலக்கு இயக்கமும் இரையாகா திருக்கவேண்டுமென்பது நமது கருத்து.

இன்னோரன்ன முறையில் இயக்கத்தை ஒழுங்குபடுத்தி நடாத்தினால் சிலாண்டில் ஆசியநற்கடலில் சாதிப்புயலால்மோதுண்டு மோதுண்டு தத்தளிக்கும் இந்திய சுயராஜ்யக்கப்பல் விரைந்து துறை நண்ணும்.

தீண்டாமை நேயர்கள் மனந்திரும்பிப் பரந்தநோக்கம்பெறுமாறு கிறிஸ்து பிறந்த இவ் வாரத்தில் ஆண்டவனை வழுத்துகிறோம். கிறிஸ்து பெருமான் அன்பு மன்பதையை ஆள்வதாக.

குருகூர்ப் பள்ளு

இந்நூல் ஆழ்வார் திருநகரி சடகோபப் புலவரால் இயற்றப் பெற்றது. இதன் பதிப்பாசிரியர் பெரியன். வெ. நா. ஸ்ரீநிவாச ஐயங்காரவர். இந்நூல், ஓர் அரிய முன்னுரையை அணிந்திருக்கிறது. அது, சென்னை யூனிவர்ஸிட்டி தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால் எழுதப்பெற்றது. அம்முன்னுரைக்கண் பள்ளுப்பாட்டைப்பற்றிய ஆராய்ச்சி சுருங்கிய முறையில் திகழ்வது தமிழ் பயில்வோர்க்கு விருந்தாகும். "........'குருகூர்ப்பள்ளு' அவ்வகை நூல்களுள் ஒரு கௌரவமான ஸ்தானம் பெறுதற்குரிய தென்பது அதனைக் கற்போர் எளிதிலுணர்வர். பள்ளுப்பிரபந்தங்களுக்குரிய முக்கிய லட்சணங்களை யெல்லாம் அது பெற்றிருக்கின்றது; மிகச் சுருக்கமாகவும் நயமாகவும் அமைந்திருக்கின்றது. செய்யுட்களும் இனிமை முதலிய நலங்கள் பொருந்தியுள்ளன...." எனவரும் முன்னுரையாசிரியர் மொழிகளால் நூலின் இயல்பு நனிவிளங்கும். விலை அணா 6 கிடைக்குமிடம்: பெரியன். வெ. நா ஸ்ரீநிவாசய்யங்கார், திருஞான முத்திரைப் பிரசுராலயம், ஆழ்வார் திருநகரி.

विजय रक्षिता

VIJAYA RAKSHITA

விஜய ரக்ஷித கவசம்

நீங்கள் கவலையற்று அச்சமின்றி வாழ விரும்பினால்—, நற்கியாதியுடனும் தன சம்பத்துடனும் புத்திர சந்தானத்துடனும் ஆரோக்கிய திட சரீரத்துடனும் இருக்க எண்ணினால் நமது கவசத்தை அணிந்து கொள்ளுங்கள். இது, நியாயமான எக்காரியத்திலும் வெற்றியையும், தொழிலில் மேன்மையையும், குடும்ப வாழ்க்கையில் ஒற்றுமையையும் வேறு பல நலன்களையும் உண்டுபண்ணும்.

வெள்ளிக் கவசம் ரூபா 5. தங்கக் கவசம் ரூபா 15.

விலாசம்:—பிரபசர் - கா. கோவிந்தாச்சார்,
1/34, லஸ் சர்ச் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.

காதம்பரி

இந்நூல் வடமொழியில் பாணபட்டனார் என்னும் புலவர் சிகாமணியினால் செய்யப்பட்டு, தன்னைக் கற்பார்க்கு இன்பமளித்துத் திகழ்வது வடமொழியாளர் பலர்க்குந் தெரிந்ததே. இந்நூலின் அருமை பெருமைகளை வடமொழி பயின்றோரேயன்றிப் பிறரும், சிறப்பாக மாணவரும் உணர்ந்து இன்புற வேண்டி, இனிய செந்தமிழ் நடையில் இயற்றப்பெற்று வெளி வந்துள்ளது. விலை அணா 12

தென்னாட்டுப் பெரியோர்

இரண்டாம் பதிப்பு

எஸ். எஸ். அருணகிரிநாதர்

(Tamil Pandit, T. T. V. High School, Madras)

அன்பிற் பெரியாராய்த் திகழ்ந்து புலவர் முதல் பாமரர் ஈறாக யாவரும் தெரிந்து போற்றுந் தன்மை வாய்ந்துள்ள தாயுமானவர், குலசேகராழ்வார், பட்டினத்தார், திருமங்கை யாழ்வார் ஆகிய நான்கு பெரியோர் தம் திவ்விய சரிதங்களையும் இந்நூலின் கண் பரக்கக் காணலாகும். இந்நூல் எளிய தமிழ் நடையிலே கற்போர் உள்ளங் கவரும் வண்ணம் அழகுபெற அமைந்துள்ளது. விலை அணா 10

பன்னிரு திருமுறையாசிரியர் வரலாறு

அ. பாலசுப்பிரமணிய பிள்ளை

(Head Tamil Pandit, Town High School, Kumbakonam)

எழுதியது விலை அணா 10

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

வித்வான் த. சண்முகக் கவிராயரின் மகாபாரதம் தமிழ் வசனம்

திருத்தமான உயர்ந்த பதிப்பு. இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூபா 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூபா 5. மற்றவை அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துப் பிரசுரங்கள்

	ரூ.	அ.
ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திவ்ய சரிதம் (விரிவானது) ...	5	0
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் (சுருக்கம்) ...	0	8
ஸ்ரீ ராமகிருஷ்ண வசனாமிருதம் ...	1	8
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 1003 உபதேச மொழி ...	1	6
குருதேவர் வாக்கியம்	0	5
நமது தாய்நாடு	0	8
பக்தியோகம்	0	10
கர்மயோகம்	0	12
சிகாகோ பிரசங்கம்	0	5
விவேகானந்தரின் கடிதங்கள் ...	0	8
எனது போர் முறை	0	2
பவஹாரி பாபா	0	3
ஜகஜீவபர விளக்க வினாவிடை ...	0	13
பக்தி மார்க்கம்	0	2
முக்திநெறி	0	5
எல்லாவற்றிலும் இறைவனைக் காணல்	0	2

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,

மயிலாப்பூர், சென்னை.

கன்றுங் கனியுதவும்

பண்டிதர் - எல். உலகநாத பிள்ளை அவர்கள்

இயற்றியது

விலை அணா. 10.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

ஜோதிடக் கல்விச்சாலை

ஆயுர்வேத வைத்தியசாலை

1. இதனால் சர்வோத்தம குணசீலர்களுக்கும் பிரீதியோடு தெரியப்படுத்துவ தென்னவென்றால் :—சென்னைமா நகரில் ஜோதிடக் கல்விச்சாலை ஒன்றும், ஆயுர்வேத வைத்திய சாலை ஒன்றும் இப்போது நூதனமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

2. இக் கல்விச்சாலையில் சரியான சூக்ஷ்ம ஜாதகம் நிர்ணயஞ் செய்யவும், சுத்தமான பஞ்சாங்கம் கணிக்கவும், பூகோள - ககோளாதி விஷயங்களை அறியவும், வாக்கியம் - திருக்கணிதம் - சூரிய சித்தாந்தம் என்னும் மூன்று பாகங்களும், ஸ்புடகணனம் - பஞ்சாங்க கணனம் - சாரகணனம் - கிரகண கணனம் என்னும் நான்குவித கணித முறைகளும், கிரேதாயுகம் - திரேதாயுகம் - துவாபரயுகம் - கலியுகம் என்னும் நான்கு யுகக் கணக்குச் செய்யும் வழிகளும் சம்பூர்ணமாகக் கற்பிக்கப்படுவதால் கணிதசாஸ்திரப் பயிற்சியில் பிரியமுள்ளவர்கள் இங்குத் தேர்ச்சிபெறலாம். இங்குவரச் சந்தர்ப்ப மில்லாதவர்கள் தங்கள் இருப்பிடத்தில் இருந்தே அப்பியாசிக்கலாம். அல்லது தங்கள் ஊரிலேயும் இக்கல்விச்சாலையை ஸ்தாபிக்கலாம்.

3. ஜாதகம் நிர்ணயஞ் செய்வதற்குக் கோளசாஸ்திரம் அச்சிடப்பட்டு வருகிறது. ராயல் 80 பக்கங்கள் கொண்ட நல்ல கிளேஸ்காகிதத்தில் மகா உன்னதமான சித்திரப் படங்களுடன் முதற்சஞ்சிகை அச்சிடப்பட்டுத் தயாரா யிருக்கின்றது. விலை ரூபா 1. வெளியூருக்குத் தபால் வி. பி. சார்சு உள்பட ரூபா 1-5-0. வேண்டுவோர் கீழ்க்குறித்த விலாசத்திற்குத் தெரிவித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. நமது ஆயுர்வேத வைத்தியசாலையில் அபூர்வமான ஔஷதங்கள் தயாரிக்கப்பட்டிருப்பதால் பெருவியாதி என்னும் கருங்குஷ்டம் - வெண்குஷ்டம் - செங்குஷ்டம் முதலிய பயங்கரமான நெடுநாளாகத் தீராத எவ்வித ரோகங்களா யிருந்தாலும், ஆராத ரணங்களா யிருந்தாலும் உயர்தரமான ஔஷதங்களால் குறைந்த செலவிலும், கூடிய சீக்கிரத்திலும் இங்குச் சொஸ்தம்செய்து வருவதால் அவிழ்தங்களை வாங்கியுண்டு சுகம்பெறுங்கள்.

5. **குஷ்டரோகம்,** மேகரோகம் எல்லாம் கெந்தக பஸ்மம் எடுக்கக்கூடியது என்று எல்லா வைத்தியர்களுக்கும் தெரிந்த விஷயமேயாம். அப்படிப்பட்ட கெல்லி,கெந்தகம் கூட்டுவர்க்க மில்லாமல் தனிக்கெந்தகம் மூலிகையில் கவசித்து 50 எருவில் புடமிட்டு ஜெயித்து எடுத்த பஸ்மம். நம்பிக்கை யில்லாவிடில் நேரில் செய்துகாட்டவுங் கூடும். செய்யும் முறைகள் கற்பிக்கவுங்கூடும். செய்துமுடிந்த அசல் பஸ்மம் பலம் 1-க்கு விலை ரூபா 5. வேண்டுவோர் கீழ்க்குறித்த விலாசத்திற்கு எழுதித் தபால் வி. பி. மூலமாகப்பெற்றுக்கொண்டு பரீக்ஷித்துப் பார்க்கலாம். மிக அபூர்வமான பஸ்மம் ; மிகக் குறைந்த விலை.

6. அடிக்கடிவரும் **பல் உபத்திரவ** வியாதியா யிருந்தால் டாக்டர்கள் அந்தப் பல்லைப் பிடுங்கி எறிந்து விடுகின்றார்கள். இங்கு அப்படிப்பட்ட கத்தி முதலிய ஆயுதப் பிரயோகங்கள் இல்லை. உள்ளுக்குச் சாப்பிட்டு விஷநீரையும், புழுப் பூச்சிகளையும் வெளிப்படுத்தி ஆயுள்பரியந்தம் பல் அசைவு, ஆட்டம், உபத்திரவம் முதலிய கஷ்டங்கள் இல்லாமல் ஆணிபோல் பல் எப்போதும் கெட்டியாக அமுந்தச் செய்யக் கூடிய மாத்திரை யுளது. 15 மாத்திரைக் கிரயம் ரூபா 5. கடினமான பத்தியங்கள் இல்லை. அவிழ்தம் அனுப்பும்போது பத்தியங்கள் எழுதி அனுப்பப்படும். ஒருபல் இழந்தால் ஆயிரங் கொடுத்தாலும் மறுபடியும் அப்பல் வருமா? பல்நோய்க்கு நாம் செய்யும் சிகிச்சைகள் போன்று இதுவரை இந்தியாவில் யாரும் செய்ததில்லை என்பது திண்ணம்.

7. வெள்ளை என்னுங் கொள்ளை நோயை 7 நாளையில் சொஸ்தம் செய்யக்கூடிய எமது லேகியத்தைக் காலை மாலை 2 வேளையும் உண்டால், எத்தகைய கொடும் வெள்ளையும் நீங்கும். 14 உருண்டை வெள்ளி ரேக்குகளால் கவர் செய்யப்பட்டது; உண்பதற்கு மிக்க ஆரோக்கியமானது; குமட்டல், வெகுட்டல் கடினமான பத்தியங்களில்லாதது. டப்பி 1-க்கு விலை ரூபா 1. ஆரம்ப வியாதியா யிருந்தால் ஒரு டப்பியே போதுமானது. நாள்பட்டதா யிருந்தால் 2, 3 டப்பிவரை சாப்பிட, வியாதி முற்றிலும் குணப்படும்.

8. மேக ரோகங்களால் பலவீனப்பட்டு உலுத்துப்போன எலும்புகள் பலப்படவும், தளர்ந்துபோன நரம்புகள் கெட்டிப்படவும், சுருங்கிப்போன தசைகள் இரத்த விருத்தியடைந்து மேனி அல்லது அழகு உண்டாகவும், முகம் வசீகரமாயிருக்கவும், அமிதமான தாது

புஷ்டி யுண்டாகவும், கண்பார்வை குறைவுக்கு ஒளியுண்டாகவும், தலையில் ரோமங்கள் குட்டையா யிருந்தாலும், உதிர்ந்துபோ யிருந்தாலும், பாலநரையா யிருந்தாலும், கறுத்தும் தரையில் புரளும்படி நீண்டும் கூந்தலை வளர்க்கவுங்கூடிய தைலங்கள், லேகியங்கள், மாத்திரைகள், கிருதங்கள், அரக்குகள், ஷர்பத்துகள், எண்ணெய்கள் முதலியனவும் தயாரிக்கப் பட்டிருக்கின்றன.

9 இங்குவரச் சந்தர்ப்ப மில்லாதவர்கள் தங்கள் இருப்பிடத்தில் இருந்தே அவிழ்தங்களைத் தருவித்து உண்டு சுகம்பெறலாம். ரோகஸ்தர்கள் ஆண்பால் பெண்பால் என்பதையும் வயது எத்தனை என்பதையும், வியாதி ஆரம்பித்த காலத்தையும், ரோகத்தின் விபரத்தையும், தேகஸ்திதியையும் தெரியப்படுத்த வேண்டும். அல்லது செலவு செய்யக்கூடிய தனவந்தர்களாயிருந்தால் நாமே அவர்கள் இருப்பிடம் போந்து வியாதியை முற்றிலும் சொஸ்தம் செய்துவரக்கூடும். அனுப்பும் அவிழ்தங்களுக்குத் தபால் வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். பதில் வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

10. குஷ்டரோகம் எப்படிப்பட்டதா யிருந்தாலும் ஒருமண்டலம் 48-நாள் அல்லது 7-வாரம் அவிழ்தந்தான் உபயோகம். இதன் கிரையம் 35 ரூபாய்தான். இந்நோய்க்கு இது அதிகமில்லை. இதிலுங் குறைந்த ரோகங்களுக்குக் குறைந்த செலவும், குறைந்த நாளுமாகும் என்பது கவனிக்கத்தக்கது. ரோகஸ்தர்கள் சௌகரியத்தின் பொருட்டாகவும், எப்போதும் நிரோகிகளாயிருக்கவும், இங்கு வந்திருந்து சொஸ்தம் செய்துபோகலாமென்றும், அவிழ்தங்கள் தருவித்துஉண்டும் சுகம்பெறலா மென்றும், நாமே தங்கள் இடத்திற்கு வந்தும் ரோகநிவாரணம் செய்யக்கூடுமென்றும் இப்படி மூன்றுவிதமாக வற்புறுத்திக் கூறுகின்றபடியால், இந்த இடத்தில் அபூர்வமான ஜோதிடக் கல்வியும், அரிய ஆயுர்வேத ஔஷதங்களும் உள்ளனவென்பதை அறிஞர்கள் ஊகித்தறியலாம்.

இப்படிக்கு:

தி. பார்த்தசாரதி நாயகர்,

கணிதஜோதிட போதகாசிரியர் & நேடிவ் டாக்டர்,

நெ. 53 பச்சையப்பசெட்டி தெரு, செட்டிதோட்டம், மவுண்ட்ரோட் போஸ்ட், மதராஸ்.

எல்லா டானிக்குகளுக்கும்
நம்முடைய
பெரிய தலைவன் யார் ?

ம த ன ம ஞ் ச ரி

மாத்திரையே

பெரிய தலைவன். இது பலவீனம், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புகளின் தளர்ச்சி, இந்திரிய ஸ்கலிதம் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தேகத்தை வஜ்ர சரீரமாக்கி விடுகின்றது. ஒரு டப்பி விலை ரூபா 1.

இனும் ! வைத்திய வித்திய இனும்!!

விபரம் வேண்டுவோர்
எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

மதனமஞ்சரி பார்மசி,
1/94, சைனாபஜார் ரோட், மதராஸ்.

ஏஜண்டு :—
M. S. மலீம், K. B. அண்டு கோ.
No. 14, டத்தோகிராமட் ரோட்,
பினாங்கு S. S.

காரைக்காலம்மையார்

திருப்பாடல்கள்

திரு. வி. க. இயற்றிய
அ ரு ம் ப த வு ரை யு ட ன்
விலை அணா 6.

ஆனந்தாதி
ஆனந்த அட்சயாந்த

73-வருட

பஞ்சாங்கம்

விலை ரூபா 7.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலி தெரு,
இராயப்பேட்டை, சென்னை.

"நவசக்தி" ஆசிரியர்

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

இயற்றிய நூல்கள்

தமிழ் மணம் வேண்டுமா, விடுதலை வேண்டுமா,
பெண் ணுரிமை வேண்டுமா,
தீண்டாமை யொழிதல் வேண்டுமா,
சமரசம் வேண்டுமா, சன்மார்க்கம் வேண்டுமா,
இயற்கை யின்பம் வேண்டுமா,
வீரச்சுவை ததும்பப் பேசவும் எழுதவும் வேண்டுமா ?

வேண்டுமானால்

"நவசக்தி" ஆசிரியர் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இயற்றிய நூல்களை வாங்கிப் படித்துப்பாருங்கள். அந்நூல்கள் வருமாறு:—

	ரூ.	அ.
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை	2	0
தமிழ்த் தென்றல்	2	0
முருகன் அல்லது அழகு	1	0
இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம்	0	12
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்	2	8
என்கடன் பணிசெய்து கிடப்பதே	0	8
சைவத்தின் சமரசம்	0	8
சைவத்திறவு	0	8
கடவுள் காட்சியும் தாயுமானாரும்	0	4
தமிழ் நூல்களில் பௌத்தம்	0	4
சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து	0	8
நாயன்மார்	0	3
சைவ சமய சாரம்	0	1
இமயமலை அல்லது தியானம்	0	6
தமிழ்நாடும் நம்மாழ்வாரும்	0	4
உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல்....	0	4
முருகன் அருள் வேட்டல்	0	4

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபாற்செலவின்றி மணியார்டர் கமிஷன் கழித்து வி.பி.யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

இதற்கு ஒரு
வட்டமேசை
மகாநாடு
வேண்டுமா
?
ஊரறிந்த
உண்மை
யாயிற்றே!

ருக்மணி
குக்கர் அடு
க்கு
சமையலுக்கு சிகரற்றது.
1, 2, 4, 6, 8, 12, 14 பேர்
களுக்கு ஏற்ற அளவுகள்
ரூ. 10-8, 14, 18, 23, 29
35, 41. விபரபுத்தகம் இனாம்.

இன்றே
எழுதுக.
ருக்மணி
குக்கர்
கம்பெனி,
இராயபுரம், (3)
சென்னை.

வெள்ளி பஸ்பம்

வெள்ளை, வெட்டை, மூலங்கள், எலும் புருக்கி, சீரழிவு, ஷை சம்பந்தமுள்ள பெரும் பாடு எல்லாந் தீரும். தளர்ந்த தாது வலுக் கும். மற்ற நோய்களுக்கும் மருந்துண்டு. வியாதியின் விபரம் எழுதினால் தக்க பரிகாரம் மருந்துடன் தெரிவிக்கப்பெறும். 5 நாளில் நிச்சயம் குணம் தெரியும். 40 நாள் மருந்தின் விலை ரூபா 2-8-0.

விலாசம் :—

சே. விசுவநாத செட்டியார்,
வைத்யம், வாலுகுடி, திருச்சி ஜில்லா.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப் பத்திரங்களும் அளிக்கப்பெற்றவர். ஒரு ஜாதகம் நேரில் பார்க்க ரூபா 5. 1 வருஷ பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப்பற்றின 3 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.) பண்டித காழியூர் :

ம. ஸ்ரீநிவாசாச்சாரியார்,
1/34, லஸ் சர்ச்ரோட்,
மயிலாப்பூர், மதராஸ்.

தாதுபுஷ்டிக்கு

மன்மத குளிகை

வாலிபப் பருவத்தில் முறைதவறிய தீச்செயல்களால் நீங்கள் இழந்த பலம், தாது நஷ்டம், போகசக்திக் குறைவு, இவைகளைத் திரும்பக் கொடுத்து, இல்லற ஒற்றுமை, வீரிய விருத்தி மன உற்சாகம் முதலியவைகளை யுண்டாக்கும். ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள்.

20 குளிகை ரூபா 2.
வி. பி. செலவு வேறு.

C. மலையப்பசாமி,
நித்தியானந்த வைத்தியசாலை, பழனி, S.I.

தேகபலம்
புத்திர சந்தானம்

இவைகளை யடைய எங்கள்
ஆதங்கநிக்ரஹ மாத்திரைகளை
உபயோகியுங்கள்.

இம்மாத்திரைகள் சென்ற 51 வருஷங்களாகப் பெரும் புகழும் பெற்று வருகின்றன; மேலும், தேக அசதி, மலச்சிக்கல், ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கண்டிக்கின்றன. 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூபா 1. 5 டப்பிகள் ரூபா 4.

இனாம்! இனாம்!!

காம சாஸ்திரம்

என்னும் புத்தகம் கேட்போருக்கு இனாமாகவும், தபால் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, சென்னை.

பெரிய புராணம்

மூலமும்

அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும்

வசனமும்

சஞ்சிகை சஞ்சிகையாக வெளிவருகிறது

ஏழை மக்கட்கு நல்ல சந்தர்ப்பம் !

சேக்கிழார் பெருமான் திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்தைப் பற்றித் தமிழ்மக்கட்கு விரித்துக் கூற வேண்டுவதில்லை. பெரியபுராணமெங்கும் பத்திச்சுவை நனி சொட்டிக் கொண்டிருத்தல் வெள்ளிடைமலை. தன்னை ஓதுவோரையும் கேட்போரையும் அன்புக்கடலில் திளைப்பிக்கும் பேராற்றல் வாய்ந்தது பெரியபுராணம். கடவுள் அன்பு, ஆன்மநேயம், திருத்தொண்டு, சீர்திருத்தம், சொல்நயம், பொருள்நயம், தமிழின்பம் முதலியவற்றிற்குப் பெரியபுராணம் ஒரு வைப்பு என்று கூறல் மிகையாகாது. சிறந்த தமிழ்க் காவியங்களுள் பெரிய புராணமும் ஒன்று என்று சுருங்கச் சொல்லலாம்.

இத்தகைச் சிறந்த தமிழ்நூலை ஏழைமக்களும் எளிதில் வாங்கிப் பயன் பெறும் பொருட்டுப் பெரியபுராண மூலமும், அதற்குத் திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் வரைந்துள்ள அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும், வசனமும் சேர்ந்த ஒரு பதிப்பு, டிம்மி ஆறு பாரங்கொண்ட சஞ்சிகை சஞ்சிகையாக மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது.

அன்பர்கள் உடனே சந்தாதாரர்களாகச் சேர்வார்களாக.

சந்தா விவரம்

புத்தக முழுவதற்கும் முன்பணம்—சென்னை	ரூபா	5 0 0
வெளியூர்—தபாற் செலவுடன்	,,	6 0 0

6 சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு ஒரு சஞ்சிகை அதிகமாக அனுப்பப்படும்.

குறிப்பு :—புத்தகம் முழுவதற்கும் 1932-ம் வருஷம் ஆகஸ்டுமீ இறுதிக்குள் சென்னை வாசிகள் ரூபா 3½-ம் வெளியூரார் ரூபா 4-ம் முன் பணம் செலுத்த வேண்டுமென முன்னம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; அந்தக் காலம் கடந்துவிட்டமையான், இப்பொழுது முன்பணக் கட்டணம், சென்னைக்கு 5 ரூபாயாகவும், வெளியூருக்கு 6-ரூபாயாகவும் விதிக்கப் பட்டிருக்கிறது.

காரியஸ்தர் :—முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

ஜெகப் பிரசித்திபெற்ற

காமினியா சோப்புகள்

காமினியா ஒயிட்ரோஸ் சோப்

உண்மையாக இந்த உயர்ந்த சோப், அதனுடைய ரோஜா புஷ்பங்களின் வசீகரமான வாசனையால் உங்களை ஆச்சரியப்படும்படி செய்யும். 3 கட்டிகள் உள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

காமினியா சந்தன சோப்

சந்தனக் கட்டையைப்போன்ற வாசனையையும், பலரும் விரும்பும்படியான வாசனையையும் கொடுக்கிறது. இது மூடான சருமத்திற்கு மிகவும் நன்மை பயக்கக் கூடியது. 3 கட்டியுள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

காமினியா லவண்டர் சோப்

இச்சிறந்த சோப்புகள் உயர்ந்த சாமான்களால் சிறந்த முறையில் தயாரிக்கப்படுவன; மனோரம்மியமான வாசனை வீசுவன; தேகத்திற்கு அழகையும் மனதிற்கு மகிழ்ச்சியையும் அளிப்பன. அழகை விரும்புவோர்க்கு இது ஒரு வரப்பிரஸாதம் போன்றது. 3 கட்டி உள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

டில்பகார் சோப்

சருமத்திற்கு வேண்டிய எண்ணெய் முறைப்படி உள்ள வஸ்துக்கள் நிரம்பிய ஒரு மிருதுவான சோப். இதன் அதியற்புத குணத்தை விஸ்தரிக்க முடியாது. இதனுடைய ஏராளமான புஷ்ப வாசனையால் ஸ்நான அறையை நந்தவனம்போல் செய்கிறது. இன்று மாத்திரம் இந்த உயர்ந்த டில்பகார் சோப்பைப் பரீக்ஷியுங்கள், 3 கட்டி உள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்.

மதராஸ் டிஸ்டிரிபியூட்டர்கள் :—

ஜே. என். சேட் & கோ,

நெ. 68, டைக்ராப்ட்ஸ் வீதி, திருவல்லிக்கேணி, சென்னை.

தயாரிப்பவர்கள் :—

The Anglo-Indian Drug & Chemical Co., Bombay, 2.

Edited & Published by T. V. Kalyanasundaran; Printed by T. V. Volagnnathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, Madras.